ஓம்
பரப்பிரம்மணே நமஃ
"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி"

# இகபரசுகசாதனி.

வாலியம் I. 1903ஹு மேமீ புத்தகம்

## மனனமாலை.

அத்துவித வத்துவைச் சொற்ப்ரகாசத் தனியை
யருமறை கண்முரச றையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யநாதி யேக
தத்துவ சொருபத்தை மதசம்மதம் பெருச்
சாலம்ப ரகித மான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபதவ் யோம நிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை
நிர்விஷய சுத்த மான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிரா மயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத் தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம்.

---

மலரயனுய்ப் படைத்தான் மாலவனுகிக் காத்தா
னிலகரனுகி யெல்லாந் துடைத்தவனிறைவ னுனன்
மலைமகட் கொருபாலீந்து மலிபுனற் கங்கையாளைச்
சிலைமதி முடியில்வைத்தான் றிருப்புலி வனத்துளானே.

---

நீரிடை யிருப்ப னிலத்திடை யிருப்பன்
காற்றிடை யிருப்பன் கனலிடை யிருப்பன்
விண்ணினட யிருப்பன் வெயிலிடை யிருப்பன்
மதியிடை யிருப்பன் மனத்திடை யிருப்பன்
றதியிடை நெய்போற் சங்கரன் ருனே.

---

மூலமென்றழைத்த முனைக்கொம்பியானை, வருத்தந்தீர்ப்பான் வந்தனெவனே, தூணிலுமிருப்பன் றுரும்பிலுமிருப்பன் எனுமழசொல்லுக் கெதிர்ந்தவனெவனே, துகிலுரிகாலைத் துருவதன் மகட்கு, மாளாத்துகிலை வருத்தினனெவனே, வருச்சுனற்காக வமரிடையிருந்தாங் குணர்மெய்ஞ்ஞான முரைத்தவனெவனே, வவனேபிரமமென் றறிமன்னே.

---

கல்லாலின் கீழ்க்கடவுளாகிப், பொல்லா ஞானம்புரிந்தவனெவனே, மால்வரைவில்லாய் வலியவர்புரங்க, ணீறெழவொருக்கி நின் [illegible]ழவரைச், சேவடி நீழலிற் சேர்த்தவ னெவனே, [illegible]க்கவின் சிறுபாலன், மரணந் தவிர்ப்பான் [illegible] வவனே பிரமமெ[illegible]ன்னே.

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவரெம் பெருமா னென்று - சுவர்மிசைச்
சாத்தியும் வைத்துந் தொழுவ ருலகளந்த
மூர்த்தி யுருவே முதல்.

---

யாருமோர் நிலைமையனென வறிவரிய வெம்பெருமான்
யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்
பேருமோ ராயிரம் பிரபலவுடைய வெம்பெருமான்
பேருமோ ருருவமுமுள தில்லை யிலதில்லை பிணக்கே.

---

ஒன்றெனப் பலவென வறிவரும் விடிவினுணின்ற
நன்றெழில் நாரணனுன்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே.

---

அண்டமுமாய்ப் பிண்டமுமா யளவிலாத வாருயிர்க்கோ
ருயிரா யமர்ந்தா யானுற்
கண்டவரார் கேட்டவரா ருன்னுலுன்னைக் காண்பதல்ல
லென்னறிவாற் காணப் போமோ
வண்டுளப மணிமார்பன் புதல்வனேடு மனைவியோடுங்
குடியிருந்து வணங்கிப் போற்றும்
புண்டரீக புரத்தினிணு தாந்தமௌன போதாந்த
நடம் புரியும் புனிதவாழ்வே.

---

அறியாப் பொருளு மலனறிவாலுன் கண்ணு
லறியும் பொருளு மலன்.

---

ஆருயிரி னுள்ளினிருந் தாங்காங் கறிவிப்பா
ராருயிரே மேனி யவர்க்கு.

---

அறிவுக் கறிவா யறிவிப்பான் சில்லோர்க்
கறிவுருவு கொண்டருளு வான்.

---

எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிரா
யங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே.

---

தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னை யொருபற்று முண்டோ பேசாய்ப் பராபரமே

---

வான்காண வேண்டின் [illegible]

161190

## இகபரசுகசாதனி.

உலகத்தில் மனிதன் பலவேறு வகைப்பட்ட
திகளிற் புகுந்து அளவிலாத் திரவியமும் அகண்ட
மியையும்பெற்று, மிக்க அழகுவாய்ந்த மாதர்களை
ணந்து புத்திரபௌத்திராதிகளைப்பெற்று எவ்வளவு
கமாய்வாழ்ந்தாலும், கரையிலாத கல்வியில் மிக்கத்
தர்ச்சியடைந்த பிரபல வித்துவானானாலும், உலகி
ள்ள பலவித விசித்திரமான வஸ்துக்களின் இருப்
பயும் அவைகளினாலுண்டாகும் பயனையும் அறிந்தா
ம், தன் வாழ்நாளி லொருநாளாவது சிறிது ஒய்வு கா
ம் வாய்த்தபோது, தன்னைப்பற்றி யோசிக்கநேரிடு
றது. அது என்ன யோசனை? 'இவ்வுலகில் பிறந்
தாம், கல்விகற்றோம், பொன்னைச்சேகரித்தோம், வீடு
ாசல் மனை இவைகளைக் குறைவின்றிப் பெற்றோம்,
ல்ல பெண்டிரையடைந்து நன்மக்களையும் ஈன்றோம்,
வைகளெல்லாம் நமக்கு என்ன பிரயோசனம்? நம்
டைய தேகமானது நிலையில்லாததா யிருக்கிறதே!
மின்னும் எத்தனைநாளைக்கிருப்போமென்று எண்ண
டியவில்லையே! இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்ப
ன்றுசொல்லத் திறனில்லையே! இத்தனை நாளைக்கு
ருப்போமென்று ஒருவேளை தெரிந்தாலும் அந்த நா
ாலிறக்கவேண்டியது நிச்சயந்தானே? அக்காலத்
ல் நாமடைந்திருக்கும் பாக்கியங்களையெல்லாம் விட்
பிரியவேண்டியது சத்தியந்தானே? ஆகா! சீச்சீ!
தென்ன உலகம்! இதில் என்னவாழ்வு! இதில் எது
ம்? எல்லாம் பயனற்றது என்றுதீர்மானித்து சிறிது
க்தியடைந்து, மனிதன் ஓர் விதமான மனக்கிலே
த்தை யடைகிறான். அம்மனக்கிலேசத்தை நீக்கவகை
யறியாது மறுபடியும் மனிதன் உலகவியாபாரத்தில்
பிரவேசித்து முன்செய்த யோசனையையும் மறந்து விடு
கிறான். இப்படியும் செய்யலாமோ? ஒருதரம்யோசித்த
போது உலக சுகம் அனித்தியமென அறிந்த பின்னர்
தைமறந்து மறுபடியும் உலகத்தில் ஆசைவருமோ?
தரம் நமக்கு மரணம் உண்டென அறிந்தபின்னர்,
மாவதென்னை, ஜனனமாவதென்னை, என்றுமேல்
ய்ச்சிசெய்ய புத்தியைசெலுத்தாமல், நமக்குமரண
ல்லை யெனத்துணிவது முண்டோ? இவ்வுலகிற் பிற
க எங்கிருந்துவந்தோம் இறந்தபின் எங்குபோவோ
மன அறியாதவனாயில் மனிதனுக்கு நித்திரையும்
மோ? யோசித்தும் தெரியாவிடின் தக்கபெரியோர்
டைந்து உண்மையை உணராதவனாயில் உலக
கி... னமும் செல்லுமோ? இதென்ன விபரீதம்!
... யறிந்தும் உலகத்தை
மறிந்தும் நம்மையறியாமலும், இப்படி முக்கியமான
விஷயங்களில் மூடமாயிருப்பது மோர் விந்தையோ?
இன்றைக்குச்சுகமாய்த் தோன்றியது நாளைக்குத் துன்ப
மாய் முடிகிறது. இன்றைக்குத் துன்பமாயிருந்தது நா
ளைக்கு இன்பமாய் முடிகிறது. இப்படி மாறி மாறி சுக
துக்கங்களைக் கொடுக்கும் இயல்பையுடைய உலகமெத்
தன்மைத்தென்று யோசியாம லிருப்பது நியாயமோ?

தினந்தோறும் கண்டு அனுபவித்து வரும் உலகி
னது நிஜசொரூபத்தையும் தன்னுடைய உண்மைசொ
ரூபத்தையும் மனிதன் அறியசக்தி யற்றவனாகில், ஒரு
வாறு நோக்கின் நானாவித வித்தியாசமாயும் எண்ண
ரிய பேதங்களையுடையதாயும், மற்றொருவாறுநோக்கின்
ஓர் வித்தியாசமுமின்றி ஏகமாயும், எண்ணரிய சரா
சரங்களும் நோக்கும்பேதத்தால் பலவாயும் ஒன்றாயும்
காலவரையறைப்படி ஓர் கிரமத்தை யனுசரித்து ஓர்
சட்டத்திற்குக்கட்டுப்பட்டு நடப்பனபோலத் தோன்றி
யிருந்துமறையும் ஆச்சரியத்தையுடைய உலகத்திற்கு
கர்த்தாவாய்விளங்கும் கடவுளினது சொரூபத்தையும்
மகிமையும் வல்லமையும் அறிந்து ஆனந்த மடைவது
எப்படி கைகூடும். மனிதன் தன்னையும் தனக்காதா
ரத்தலைவனையும் உலகையும் உண்மையிலறிந்தாலல்லா
மல், மாறுதலில்லாத நித்திய சுகத்தை யடையமாட்
டான். ஜகஜீவ பரங்களை யறியும்வரையில் பிறப்பு உண்
டு, இறப்பு உண்டு, நரகமும் உண்டு, பயம்விடாது,
மோகம் ஒழியாது, ஞானம் வராது. அல்லலும் துன்ப
மும் அதிகரிக்கும்.

துக்கம் நிவர்த்தியாய் நித்திய பேரின்பத்தை
யடைய ஜகஜீவபரங்களினது ஞானம்வேண்டும். அந்த
ஞானத்தையடைய விசாரணை அவசியம். பெரியோர்
கள் தங்கள் அனுபவத்தில் கண்டு உலகஉபகாரமாக
எழுதிவைத்த சாஸ்திரங்களைப்படித்து ஆராய்ச்சிசெய்
வதுதான் விசாரணை. ஜகஜீவபரங்களினது ஞானத்
தைப் போதித்து மனிதனுக்குண்டாயிருக்கும் துன்பத்
தைப் பரிகரித்து இன்பத்தைக் கொடுப்பதுதான் மதம்.
மதமானது பலதேசங்களிலுள்ள மனிதருடைய புத்தி
யின் சக்தியிருந்தவாறுபலவிதமாய் ஏற்பட்டிருக்கிறது.
சிலதேசங்களில் ஜனங்களினுடைய நாகரீகத்திற்கு தகு
ந்தமாதிரி மதங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. சரா
சரங்களனைத்தினும் சமமாய்ப்பரவிநின்று அவையனை
த்திற்கும் வேறாய் ஏகநாயகமாயொளிரும் ஒப்புயர்வற்ற
தெய்வம்போல், எல்லாமதங்களிலும் கலந்து அவைக
ளுக்கெல்லாம் மேலான வேறு மதம்போல் ... றைக்
கும் அழியாதநித்தியமாய்ப் புனிதமாய்ப் பு...
விளங்குவது ... ம். இந்தம...

தென்றுசொல்லிப் புறமதங்களைத் தாழ்த்தி விட்டதாக நினைக்கக்கூடாதென்று இப்பத்திரிகையைப் படிக்கும் நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். தனிச்சர்க்கரையின் சுவைக்கும், சர்க்கரைச்சேர்ந்த பணியாரங்களினது சுவைக்கும் எவ்வளவு வித்தியாச முண்டோ அவ்வளவு வித்தியாசந்தான் இந்துமதத்திற்கும் ஏனைய மதங்களுக்குமுள்ள வித்தியாசம். சர்க்கரையும் தித்திக்கின்றது. சர்க்கரைசேர்ந்தபணியாரமும் தித்திக்கின்றது. இரண்டுசுவைகளையும் எப்படி யறிகிறோமோ அப்படியே இந்துமதத்தையும் பிறமதங்களையும் அறிய வேண்டியது. இனிப்பென்னும் சுவையையே உடைய சர்க்கரை போன்றது உண்மையையே கூறும் இந்து மதம். பணியாரங்களில்சேர்ந்த சர்க்கரை போன்றது ஏனைய மதங்கள். ஓர் தேசத்தில் அநேகபெரியோர்கள் ஒன்றுகூடி உலகத்தைக்குறித்தும், மனிதர்களைக்குறித்தும் இன்னும் கடவுளைக்குறித்தும் சொல்லிய வசனங்களைகேட்ட ஜனங்கள், ஆஹா! இவர்கள்கூறுவது சரியெனஒப்புக்கொண்டு கொடுத்த சம்மதமேஅத்தேசத்து ஜனங்களுக்கு மதமானபடியால், இந்துமதக்கோட்பாடுகளை எம்மதத்தைச்சேர்ந்த ஜனங்களுக்கும் அவர்கள் அனுபவத்தையனுசரித்து உண்மைவழியில் கூறுவது அவர்களுக்குச் சம்மதமாயிருந்தால் அக்கோட்பாடுகளில் என்னகுறை? ஓர் காலத்தில் ஓர்தேசத்தில் கடவுளைக்குறித்து சிலகோட்பாடுகளையுடையமதம் ஒன்று ஏற்பட்டது. மற்றோர்காலத்தில் மற்றோர் தேசத்தில் கடவுளைக்குறித்தே வேறு சில கோட்பாடுகளை யுடைய பிறிதோர் மதம் உண்டாயிற்று. இவ்விரண்டுமதங்களுக்குமுள்ள வித்தியாசம் எதை ஆதாரமா யுடையது? அதாவது இவ்விரண்டு மதங்களின் வித்தியாசத்திற்கு என்னகாரணம்? அந்தந்தமதம் உண்டாகிய காலமும் தேசமும், அதை உண்டாக்கிய பெரியோர்களின்புத்தியின் பேதமே வித்தியாசத்திற்குக்காரணம். வேறுகாரணம் கிடையாது. ஆனால் இவ்விருமதங்களும் எந்த விஷயத்தில் ஒற்றுமையுடையது? இவ்விருமதங்களும் கடவுளை ஆராய்ந்து அறியவெழுந்தமையின் கடவுளே பொதுவானவிஷயம். இவ்விஷயந்தான் இவ்விருமதங்களுக்கும் ஒற்றுமையை யுண்டாக்கியது. ஆகையால் மதகோட்பாடுகளில் சில ஏற்றக்குறைவு காலத்தைப் பற்றியும் தேசத்தைப்பற்றியும் மனிதர்களின் மனப்பரிபாக முதிர்ச்சியைப்பற்றியும் உண்டா யிருப்பினும், எல்லாமதங்களும் தேடப்புகுந்தது சர்வலோகத்தையும் ஆக்கி யளித்து அழிக்கும் ஒப்புயர்வற்ற ஓரே கடவுளை யாகையால், அக்கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகவாசிகளாய் எல்லாமதஸ்தர்களும் இருத்தல்பற்றி மதக்கோட்பாடுகளின் வித்தியாசங்களை கவனியாமல் ஒவ்வொருமதஸ்தர்களும் பிறமதஸ்தர்களை தங்களுக்குச் சகோதரமுறைமை யுடையவர்களென்பதை ப[illegible]ாமல், ஒருவரை மற்றொருவர் மேன்மேலும் உய[illegible]ஸ்திதிக்கு கொண்டுவருவதே மதஸ்தர்களின் கடமையாதலால் இகபரசுகசாதனி யென்னும் பத்திரிகையில், மததூஷணையின்றியே எல்லாரும் நித்தியமானசுகத்தை யடையவேண்டிஜெகஜீவபரங்களின் ஞானத்தைப்பற்றி சுருதி, யுக்தி அனுபவமென்னு மூன்றனுள் முக்கியமான அனுபவத்தை யதிகமாய் அனுசரித்து எல்லா மதஸ்தர்களுக்கும் பயன்படும்படி தக்க விடங்களில் யுக்திகளைக்கொண்டும், மதவித்தியாசம் பாராட்டாமல் எல்லாமதக் கிரந்தங்களை யாதரவாகக்கொண்டும், வரிசை கிரமமாய் ஆரம்பித்து எளியதமிழ் வசன நடையில் தெளிவாய் படிப்பவர் யாவரும் அறிந்துகக்கும் வண்ணம் மாதம் மாதம் எழுதப்படும். பத்திரிகை முழுவதும் மதவிஷயத்தையே யெழுதுவது நல்லவிஷயமாயினும் எல்லாஜனங்களுக்கும் திருப்தியும் பத்திரிகையில் ஆசக்தியு முண்டாகாதாகையால் அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாமென்பதை யோசித்து லௌகீகவிஷய சம்பந்தமான வியாபாரம், இராஜாங்க விஷயங்கள், கோர்ட்டு நியாயங்கள், சட்டங்கள், பலதேசத்து வர்த்தமானங்கள், மனோரஞ்சிதகதைகள் முதலான விஷயங்களும் பிரதிமாதமும் எழுதப்படும்.

## நன்றிமறவாமை.

யமுனைநதிக் கரையோரமாய் நெடுங்காலமாய்தழைத்து வளர்ந்திருந்த ஓர் வடவிருக்ஷத்தின்மேல் ஓர்கிளி அநேகநாளாய் வசித்துவந்தது. வசித்துக்கொண்டுவரும் நாளில் அவ்யமுனைதீரத்தில் கையில் வில்லும் கணையும் ஏந்தித் திரிகின்ற கானவனொருவன் பட்சிகளைக் கொல்லுந்தொழிலில் சற்றேனும் அஞ்சாதநெஞ்சனாய் பட்சிகளின்மீது வில்லுகளைத் தொடுத்துக்கொண் டிருந்தான். இப்படி யிருக்கும்நாளில் ஒருநாள் அவன் வழக்கம் போல் ஓர் பட்சியின்பேரில் தன்வில்லை எய்ய அது மரத்தின்மேற் போய்படவும் அந்தவில்லில் விஷந்தோய்ந்திருந்ததனாலே அவ்வில்பட்டு அம்மரத்தின் பிஞ்சு காய் கனி இலை முதலிய வெல்லாம் உதிர்ந்துபோய் மொட்டை மரமாய் வெட்டவெளியாச்சுது. அம்மரத்தில் வாசம்பண்ணிக்கொண்டு நெடுநாளாயிருந்த கிளியானது தழைத்திருந்தமரம் உலர்ந்துபோனதைக் கண்டு சஞ்சலங் கொண்டு "இம்மரத்தின் பழத்தைத் தின்று காலங் கருப்புத் தெரியாமல் பிழைத்திருந்தோமே இப்போதிந்த மரம் பட்டுப்போனதுபோ லாச்சே, இது தழைத்திருந்தபோது நாம் செழித்திருந்தோமே இப்

போது இளேத்தகாலத்தில் இதைவிட்டு நீங்குதல் தரும ... லவே'' யென்று அம்மரத்தின் கண்ணேதங்கி வெய் ...லுக்குக் காய்ந்து மழைக்குநனேந்து, குளிரெடுத்தும் நன்றிகுன்ருமல் அறிவையும் பலத்தையும் அனுகூல மாக்கி அவ்விருட்சத்தைவிட் டகலாமலிருந்தது. இவ் விந்தையையறிந்த ஓர் தவசிரேஷ்டர் அந்த விருக்ஷத்தி னிடத்திற்குவந்து விஷக்கணைகள்பட்டு வெந்துபோ யிருக்கிற மரக்கிளேயி லிருக்கும் அஞ்சுகத்தைக் கண்டு சொன்னதாவது.

தவசிரேஷ்டர்.

ஓ கிளியே! உன்தேகம் இவ்வளவு வருத்த முறத்தக்கதாக இவ்விடத்திற் காய்ந்து தீய்ந்துமடிந்துபோன மரத்திலிருப்பானேன். வேறேதழைத் தோங்கி பழுத்திருக்கிற மரங்களேயடைந்து சௌக்கியம் பெறக்கூடாதோ. ஏனிப்படி வருந்தப் படவேண்டும். ''தமக்கென்று ஓர் இல் இல்லார்க்கு உலகம் இல்லம் என்பதுபோல்'' கடவுள் ஏற்படுத்திய கானகங்கள் அநேகமுள, அவைகளில் வாசம்பண்ணி காலம் போக்கலாமே என்ருர்.

கிளி.

ஓ ஐயா! தவசிரேஷ்டரே! நமஸ்காரம். நானிந்த மரத்தின்மீது அனேகநாள் என்சொந்தம்போலிருந்து அந்தி பகல் மாலே இம்மூன்றுகாலங்களிலேயும், பசிநோய் தாகம்தோற்ருமற்படிக்கு பழங்களேப்புசித்து பக்குவமாய் வாழ்வுபூண்டேன், இப்போது இந்தமரத்திற்கு கெடுதிசம்பவித்து விட்டதென்று மதிகெட்டமாந்தரைப்போல்செய்நன்றி குன்றி சிந்தை மறந்து அயல் விருட்சத்தணுக மாட்டேன். உலகத்தில் ஒருவன் சுகமுஞ் செல்வமும்பெற்றிருக்கும்போது அவனுடன்கூடி சுகத்தையனுபவித்து அவனுக்குக்கெடுதியும் வறுமையும் கிட்டியகாளில் கடன்காரர் முதலியபேர்களிடத்தில் அவனேக்காட்டிக்கொடுத்து அப்பாற்போகின்ற கயவர் கசடர் கல்லார்களேப்போல் நானும் நீங்கிப் போவது நியாயமோ, தருமமோ, நாதனே சுகத்துக்கெப்படி பகுத்துச் சுகித்தோமோ அப்படியே திமைக்கும் உடன் பட்டிருக்கவேண்டும். இராமற்போவாராகில் அவர்களுக்கு பழியும் பாவமும் பங்கமும்வரும். அதுவுமல்லாமல் கொடியநரகமே அவர்களுக்குச் சொந்தவிடமாகும்.

தவசிரேஷ்டர்.

அந்தோ! தத்தையே! சுகத்தை விரும்பும் படியாகிய இந்த ஜகத்தில் தேகவருத்தம் பாராமலும் பசியைப்பாராட்டாமலும், நித்திரையில்லாமலும் பழிச்சொல்லுக்குப் பயப்படாமலும் அருமையோராமலும், இனத்தார்கள்கூறுகின்ற அவமதிப்புணராமலும் நிலே தப்பாமலும் இருப்பதனுற் பயனென்ன. என்றைக்கிருந்தாலும் இறந்துபோகிறதேகம் இருக்கின்றவரைக்கும் உண்ணல், உறங்கல் என்பதையோர்ந்து அனுபவியாமல் வருந்துவது என்னபிரயோசனம்.

கிளி.

ஓ மகானே! நீர்வேதவேதியர். சகலவிதிமுறையுந் தெரிந்தவர். தருமசொரூபி. உம்மைவிட சத்தியதருமம் வேறில்லே, நீரோ இப்படிசொல்வீராகில் நீசத்துரோகிகளாகிய நன்றிமறந்தவருக்குக் கொழுகொம்புபோலாம். என்னளவில் இப்பேர்ப்பட்ட மொழியைச் சொல்லாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

தவசிரேஷ்டர் ஆனந்தமடைந்து ஐயோ! அல்பமான பக்ஷிக்கு இவ்வளவு பேரறிவு பிறந்துள்ளது அருமையென்று அகமகிழ்ந்து ஓ சுகமே! நீ சுகமாயிரு உன்னுடைய நிலேயுணர்வதற்காகவந்தேன்-நீ மெத்தவும் நன்னெறி பற்றியிருக்கிருய்-அதனுல்நான் இருபகூர்ந்தேன்-உனக்குவேண்டியதைக் கேட்பாயாகில் தட்டாமற்றருகிறேனென்ருர்.

கிளி.

எனக்கு வரங்கொடுக்க உமக்கிஷ்டமிருக்குமாகில் இப்போது நான் இருக்கிறமரம் எப்போதும்போலே இடையூறில்லாம லிருக்கும்படியாக அனுக்கிரகம் பண்ணுமையா வென்றது.

தவசிரேஷ்டர் அப்படியே அடிக்கிற காற்றுக்கும் பெய்கிறமழைக்குங்கூட பயமற்றிருக்கும்படியாக கிருபை புரிந்தருளினர். உடனே அந்தவிருக்ஷம் முன்போல்தழைத்து கொழுந்தோடிப்படர்ந்து நெருக்கமாய் அடர்ந்து வானமளாவி காய்த்து பழுத்து சிறக்கம்பஞ் செய்திருந்தது. ஆகையால் நல்லவர்களாகிய உத்தமர்கள் சுகதுக்கத்திற்குடன்பட்டு நேசமா யிருப்பார்கள். கெட்டவர்கள் நீர் நிறைந்தகுளத்தில் பறவைசெறிந்து நீர்வற்றினுற் பறந்துபோம் தன்மைபோல நீங்கிப்போவார்கள்.

---

## மத ஆராய்ச்சி.

உலகம் உண்டாயதெப்படி? இருப்ப தெவ்வண்ணம்? இனி அழிவதுண்டா? என ஆராய்ச்சி செய்வதும், உலகின்தன்மையை யுணரப்புகுந்த நம்முடைய சொருபம் எப்படிப்பட்டதென அறியப்புகுவதும், உலகம் ஜீவன் இவைகள் சுயமாய் உண்டானவைகளா அல்லது இவைகளேச் சிருஷ்டிக்கக் கர்த்தாவொருவன் உளனுவென அறிய முயலுவதுமே மதத்தின் தொழி

லாம். வெவ்வேறு மதங்கள்போல் தோன்றும் பலதேசத்து மதங்களும் மேற்சொன்ன உலகம் ஜீவன் ஈசுவரன் என்னும் மூன்றனுள் ஏதாவது ஒன்றையாவது ஆராயப்புகுந்த மதங்களேயல்லாமல் வேறல்ல. மதமின்னதென்று அறியவிரும்புவோர்க்குப் பலமதங்களினுடைய பேதங்களை அநேக கிரந்தங்கள் மூலமாய்ப் படித்தறிவதே போதுமானதன்று. எல்லாமதங்களிலும் பிரதிபாதிக்கப்பட்ட ஜகஜீவபரங்களின் நிஜ சொரூபத்தை அனுபவத்தில் அறிவதுதான் முக்கியம். ஒருவஸ்துவின் சொரூபம் குணம் இவைகளைக் குறித்துச் சொல்லக் கேட்டதாலுண்டாய அவ்வஸ்துவின் ஞானத்திற்கும், அந்த வஸ்துவின் சொரூபம் குணம் இவைகளை நேரில்கண்டு அனுபவமாயறிந்த அதே வஸ்துவின் ஞானத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. இந்தியாவின் வடதிசையிலுள்ள இமயமலையி லுற்பத்தியாகி வங்காளக்குடாக்கடலில்வந்து விழுகின்ற கங்காநதியைப் படத்தில்பார்த்தும் அந்நதியின்பெருமையைப் புத்தகங்களில் படித்தும் அறிந்தவனுக்கும், இமயமலையையும் அதில் கங்காநதியின் உற்பத்திஸ்தானத்தையும் அந்நதி பல ஊர்களின்மீது உருண்டு புரண்டுவந்து கடலில் கலப்பதையும் கண்காட்சியாகக்கண்டு அறிந்தவனுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டென்பதைச் சொல்லாமலே யூகித்து அறியலாம்.

பிரபல வித்துவானாக வேண்டுமென்னும் விருப்பத்தால் வேதாகமபுராண இதிகாசங்கள், தர்க்க வியாகரண அலங்கார சாஸ்திரங்கள் முதலானவைகளை யெல்லாம் படிக்குங்காலத்து ஜகஜீவபரங்களைக் குறித்து அரிய பெரியகிரந்தங்களில் கூறப்பட்டவைகளையெல்லாம் பாடம்பண்ணி, தேகம்வேறு ஆத்மாவேறென்று படித்தும் ஒருக்ஷணமேனும் தேகத்தி லிருந்தே தான் தனித்திருந்து சுகமடைய வகையறியாமலும், ஈசுவரன் சர்வசாட்சியாய் எள்ளிலெண்ணைபோல் எங்குமுளன் என்று பலதரம்படித்தும், உலகத்தாரைக் கண்டால் ஒருபேச்சும் தான் தனியேயிருக்கும்போது முன்பேசியதற்கு முற்றும் மாறான எண்ணமுங்கொண்டு, உலகத்தில் சிலரைப்புகழ்ந்து சிலரைத்தூஷித்து பேதம்பாராட்டியும், தான்கற்ற வித்தை பலத்தால் தனக்கார் நிகரென எச்சபையிலும் வெகுசாமர்த்தியமாயும் மிக்க வாக்குச் சாதுரியமாயும் பேசும் வித்துவானானதலே போதுமென்று நினைத்தல்கூடாது. "கற்க கசடறக் கற்பவை கற்றபி னிற்க வதற்குத் தக" என்னும் ஆன்றோர் வாக்கியத்திற்கிணங்க, ஒருவன்தான் அப்போதைக்கப்போது மதசம்பந்தமாய் கற்கும் விஷயத்தின் உண்மையை உலகத்திலும் தன்னிடத்திலும் அனுபவமாய்ப்பார்த்துப் பார்த்து [illegible]னுமென்மேலும் பெரியவிஷயங்களையெல்லாங்கற்று அனுபவத்தையே முக்கியமாய்நாடி அதற்குத்தக்கவண்ணம் தானிருந்து தன்னைப்போல் அனைவரும் அனுபவத்தில்தெளிந்து சுகமடையவேண்டுமென்னும் நல்லெண்ணத்தால் பிறருக்கு மதவிஷயத்தைப் போதிக்கும் யோக்கியதை யுடையவனானதலே மனிதனாய்ப் பிறந்ததற்குப் பிரயோசனமென்று ஒவ்வொருவரும் நினைத்தல்வேண்டும். பல சாஸ்திரங்களைக் கற்று, கற்றவிஷயங்களின் உண்மையை மௌனமாயிருந்து அனுபத்தில் காண்பதுதான் மேலானது. வெறும்படிப்பும் அதனாலுண்டாய அதிகப்பேச்சும் மதஆராய்ச்சி செய்பவனுக்கு பயனில்லை. அனுபவமே பயனையுடையது.

உயர்ந்த குலத்தில்பிறந்து வித்தையைப் படித்துவிட்டதினாலேயே பிரயோசனமில்லையெனக் காட்டவோ பஞ்சமகுலத்தில் திருநாளைப்போவாரெனும்நந்தன் தோன்றினான். வாய்ப்பேச்சில் இலாபமில்லை, உலகப்பற்றறுத்ததை அனுபவத்தில் காண்பிப்பதே சிலாக்கியமெனத் தெரிவித்தற்கோ, கானகமேதிரிந்து கடுங்கொலையேபுரிந்து வாழ்ந்த கண்ணப்பனுக்கு முக்கண்ணன் முத்தியளித்தனன். வயதில் பெரியவராயும் நால்வேத பாராயணம் செய்தவராயு மிருத்தலே போதாதெனத் தெளிவிக்கவோ, வேதாந்தசாஸ்திர உண்மை யறிந்த அனுபவிபோல் பார்த்ததெல்லாம் பத்மநாபனேயென்று நம்பிய பாலகனான பிரகலாதனுக்குப் பரந்தாமன் பரமபதந் தந்தருளினான். மேற்சொல்லிய உதாரணங்களால் பலபுத்தகங்களைப் படிப்பதுதான் மத ஆராய்ச்சி, படித்ததை பாடம்பண்ணுவதுதான் மதந்தெரிந்து கொண்டாற் கடையாளமென்றெண்ணாமல், உலகத்தையோ, தன்னையோ, அல்லது தனக்காதாரத் தலைவனையோ, ஒருவன் சாஸ்திரமூலமாயாவது அல்லது அனுபவிகளான பெரியோர்கள் மூலமாயாவது ஆராய்ந்தறிந்ததை அவன் தன்தின அனுபவத்திலும் நோக்கவேண்டும். தேர்ந்த ஆராய்ச்சியில் உலகத்தை அனித்தியமென ஒருவனறிந்தபின் உலகத்தை நித்தியமென மயங்கி தனக்குண்டாயிருக்கும் பெண்டுபிள்ளை முதலானவைகளிடத்து நிச்சய புத்திவைத்தால், அவனுக்கு அனுபவம் இன்னும் வரவில்லையென்றே நினைக்கவேண்டும். ஆன்றோர்வாக்கியத்தை ஆதரித்து ஆத்மாவுக்குப் பிறப்பிறப்பில்லையென தெரிந்தபின் ஒருவன் தனக்கு மரணகாலம்வந்துவிட்டதேயெனக் காலனுக்குப்பயந்தால் அம்மனிதன் படித்தானேயொழிய படிப்பின் பிரயோசனத்தை அனுபவத்தில் பார்த்தானில்லை யெனக் கூறப்படுவன்.

ஓர் மதத்தை யறிந்துகொள்வது சுலபம், அறிந்த வண்ணம் நடத்தலேகஷ்டம். அறிந்தவண்ணம் அனுஷ்டிக்காதவனுக்கு தான் தெரிந்துகொண்ட விஷயத்தின் உண்மை விளங்காது. உண்மையில் மதத்தையறிந்து அனுஷ்டிக்க வேண்டுமாயின் ஆரம்பத்தில் ஒருவனுக்கு அம்மதசாஸ்திரங்களிலும், அம்மதத்தை யனுசரித்து ஒழுகிய ஆன்றோர் வாக்கியங்களிலும் நம்பிக்கையிருக்கவேண்டும். ஓர்விஷயம் அறியும் முன்னமே அவ்விஷயத்தி லுண்மையிருக்கிறதென்ற நம்பிக்கையுடன் அவ்விஷயத்தை ஆராய்ச்சிசெய்ய முயலவேண்டும். அவ்வாறு நம்பிக்கையுடன் ஆராய்ச்சிசெய்து அவ்விஷயத்தின் உண்மை புலப்படும்வரையில் அவ்விஷயத்தை அலட்சியம் செய்தல்கூடாது. பெரியவர்களாலும் சாஸ்திரங்களாலும் கூறப்பட்ட விஷயங்களை ஒருவன் நம்பிவிட்டதே போதுமானதென்று நினைப்பதும்கூடாது. ஓர்விஷயத்தின் உண்மையை பெரியோர்கள் எந்தவழியாக ஆராய்ச்சிசெய்து அறிந்தார்களோ அவ்வழியாக நாமும் ஆராய்ச்சிசெய்து அனுபவத்திற்கு ஒத்திருப்பதையும் காணவேண்டும்.

உற்றுநோக்குங்காலத்து உலகத்தில் ஏவ்வொரு வேலையும் மனிதனால் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டு முடிந்தேறுகின்றது என்பது புலப்படும். கொடியவியாதியினால் பீடிக்கப்படும் வியாதியஸ்தன் தனக்கு இன்னமருந்தினால் குணமுண்டாகுமென்று முன்னமேநம்பி அம்மருந்தையுண்டு சுகமடைகிறான். தேசகாலவர்த்தமான மறிந்தவியாபாரிகளும் தாங்கள் இன்னகாலத்தில் இன்னதுசெய்தால் இன்னவியாபாரம் இலாபகரமாய் முடியுமென முன்னம்பிக்கையுடனே ஆரம்பித்து முடிக்கிறார்கள். இப்படியே லௌகீகத்தில் ஒவ்வொருவேலையும் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்படுகின்றன. அதுபோலவே பாரமார்த்திகவிஷயத்திலும் நம்பிக்கைவைத்து ஆரம்பிக்கவேண்டியது அவசியமன்றோ? முதலில் நம்பிக்கையுடன் ஆரம்பிப்பது எவ்வளவு முக்கியமோ அதைக்காட்டிலும் பதின்மடங்கு முக்கியம் ஆராய்ச்சிசெய்தல். நமது இந்தியாவில் அநேகர் மதவிஷய சம்பந்தமாய் எதையும் சுலபமாய் நம்பிவிடுகிறார்களே யல்லாமல் தாங்கள் நம்பியவிஷயங்களை ஆராய்ச்சிசெய்தலில்லை. அநேகர் கோயிலுக்குப்போவார்கள் கோபுரத்தைப் பார்ப்பார்கள். அநேக பிராகாரங்களையும் மூலஸ்தானத்தையுங்கண்டு அகமகிழ்வார்கள். தெய்வத்தை தெண்டனிட்டு கைகூப்பித்துதிப்பார்கள். ஆனால் கோவிலென்பதென்ன? கோபுரமேன் கட்டவேண்டும்? சுற்றுமதில்கள் அநேகமிருப்பானேன். மூலஸ்தானம் என்று தனியே ஒன்றிருப்பானேன்! என்னும் சங்கைகள் உண்டாகி ஆராய்ச்சிசெய்வதில்லை. இப்படியே ஆராய்ச்சியில்லாமலே நம்பிக்கையுடன் மாத்திரம் அநேக ஆசாரங்களையும் அனுஷ்டித்து வருகிறார்கள். ஆராய்ச்சியில்லாமல் நம்பிவிட்டதினாலே பிறர்கேட்கும் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லமுடியாமல் அது எங்கள்வழக்கம், இது எங்கள் சாஸ்திரத்தில் கூறப்பட்டது; எங்கள் பாட்டனாரும் அனுஷ்டித்துவந்தது, என்றுகூறினால் கேள்விகேட்டவர்க்கு திருப்திகரமாயிருக்குமா? இராது; ஆதலால் இந்துக்களில் அநேகர் குருட்டு நம்பிக்கையுள்ளவர்களென்று பிறர்சொல்லுதற் கிடமாயிற்று. மதவிஷயத்தில் எல்லாதேசங்களைக் காட்டிலும் மேன்மையுடையதாய் தெய்வத்தன்மையுடையதாய், பேசுந்தெய்வங்களான மகரிஷிகளும்தபசிகளும் யோகிகளும் விளங்கப்பெற்றதாய், அனாதிகாலமாய் தெய்வவருளினால் உண்டாக்கப்பட்ட வேதங்களும், உபனிஷத்துக்களும் அநேக சாஸ்திரங்களும், அரியவிஷயங்களையெல்லாம் அனைவரும் அறிந்துய்ய வேண்டுமென்னும் கருணையால் மகான்களாயுள்ளபெரியோர்களாலளிக்கப்பட்ட ஸ்மிருதிகளெத்தனை புராணங்களெத்தனை, இதிகாசங்களென்ன? இவைகளையெல்லாம் ஏராளமாய் உடையதாயுள்ள இந்தியாவிலுள்ள இந்துக்கள் மதவிஷயத்தில் குருட்டு நம்பிக்கையுடையவர்களென்று பிறர்சொல்லக் கேட்பதுமுண்டா?

(இன்னும்வரும்.)

## ஔவையார் சரித்திரம்.

பூர்வத்தில் அகஸ்தியமாமுனிவர் சமுத்திரகன்னியை விவாகஞ்செய்து பெருஞ்சாகர ரென்பவரை யீன்றார். இப்பெருஞ்சாகரர் திருவாரூர் புலைச்சியைச் சேர்ந்து பகவனென்பவரைப்பெற்று அவருக்கு சகலவிதமான சாஸ்திரங்களையும் கற்பித்திருந்தார். இப்படியிருக்க பிரம்மவம்சத்தில் தவமுனியென்பவர் அருண்மங்கை யென்னும் பிராமணஸ்திரீயைச்சேர்ந்து ஒருபுத்திரியைப்பெற்று வைத்துவிட்டு தான் தனதுபத்தினியுடன் திருவிராலிமலையின்கண் தவஞ்செய்யச் சென்றபோது அந்தக்குழந்தையை ஆதரிப்பவர் ஒருவருமில்லாததினால் உறையூர்ப் பெரும்பறையன் அக்குழந்தையை எடுத்து வளர்த்துவந்தான். வளர்த்துவரும்நாளில் ஓர்நாள் அவ்வூரில் மண்மாரிபெய்து இக்குழந்தை தவிர மற்றெல்லாரும் மறித்துப்போனார்கள். அந்த ஊரில் மனித சஞ்சாரமில்லாததினாலே அந்தப்பெண்குழந்தை அவ்வூர்க்கடுத்த மேலூரகரத்திலே நீதியையன் வீடு போய்ச்சேர்ந்தது. அவனும் இந்தகுழந்தையை அன்போடு வளர்த்துவந்தான். இப்படி வளர்த்துவரும் நா

ரில் மேற்சொல்லிய பகவரென்பவர் மிக்க தேர்ச்சி யடைந்த பண்டிதராய் கண்டோர்யாவரும் வியக்கும் படியாய் பிராம்மண கிருத்தியங்களில் தவராதவராய் ஸ்தலயாத்திரை செய்யவேண்டுமென்ற ஆசைமேலிட்டவராய், காசியாத்திரையாகப் போய்க்கொண்டிருக்கும் நாளில், ஒருநாள் மேற்சொல்லிய வகரத்துக் கருகாமையிலுள்ள ஓர் சத்திரத்தில் வந்திறங்கி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்துக்கொண்டிருந்தார். இந்த சத்திரத்திற்கு நீதியையன் தலைவனாகையால் அவன் வளர்த்துக்கொண்டுவந்த பெண் பகவனென்பவர் சமையல்செய்துக் கொண்டிருந்த விடத்திற்கு நெருங்கிற்று. இப்பெண்ணைக் கண்ட அவர் புலைச்சியோ என்னமோவென்று அதட்டி தன் கையிலிருந்த அகப்பையால் அவளுடைய தலையில் இரத்தம் வரும்படி அடித்துத் துறத்தினர். உடனே அந்தப்பெண் அழுதுக்கொண்டு தன் இருப்பிடம் சேர்ந்தது. பகவனென்பவர் புனஸ்நானம்செய்து புசித்து தன்வழியேசென்று காசியையடைந்தார். காசியில் கங்காஸ்நானம்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடி ஏந்தி திரும்பிவரும்போது தான் முன் தங்கினசத்திரத்திற்கே வந்துசேர்ந்தார். அப்போது அவரிடத்தில் முன் அடிபட்ட பெண்ணானவள் மகாலட்சுமியைப் போல் அழகுள்ள யௌவன சௌந்தரியவதியாய் வந்து நின்றாள். அவளைப்பார்த்த பகவனென்பவர் அவள் மேல் மோகங்கொண்டதை யறிந்த நீதியையரென்பவர் பகவனென்பவரை அந்தப்பெண்ணை கலியாணம் செய்துக்கொண்டு அவ்விடத்திலேயே இருக்கும்படி சொன்னார். அதற்குப்பகவனென்பவர் தன் தீர்த்தக்காவடியை இராமேஸ்வரத்திற்கு கொண்டுபோய் இராமலிங்கமூர்த்திக்கு அபிஷேகம் செய்துவிட்டு திரும்பிவந்து விவாகம் செய்துக்கொள்ளுவதாகச் சொல்லிவிட்டு இராமேஸ்வரத்துக்குப்போய் தன்காரியங்களை முடித்துக்கொண்டு தான் சொன்னவண்ணம் திரும்பிவந்தார். அப்போது நீதியையர் கலியாணசடங்கை ஆரம்பித்து நான்குநாள் கலியாணத்தையும்முடித்து, ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்துவிக்கும்போது பகவனென்பவர் அந்தப்பெண்ணினுடைய தலையில் எண்ணெ பெய்யும்படி மயிரை வகிர்ந்தபோது தான் முன் அகப்பையால் அடித்தவடு அவள்தலையி லிருந்ததைக் கண்டு நீ ஆதியளல்லவா (அதாவது பழையமனுஷி யல்லவா என்றது) என்றுசொல்லி எழுந்தோடிவிட்டார். ஆனது பற்றியே அவளுக்கு ஆதியென்றபெயர் உண்டாயிற்று. எழுந்தோடின பகவனானவர் சாயங்காலம்வரையில் நடந்து அஸ்தமித்து விட்டபடியால் அவருக்கு எதிர்ப்பட்ட ஓர் பாணர்சேரியிலிருந்த மண்டபத்தில் தங்கினார். ஆதியும் அவரைப்பின் தொடர்ந்தவளாய் அம்மண்டபத்தைச்சார்ந்து பகவனென்பவரைநோக்கி. தெய்வச்செயலாக தம்மிருவருக்கும் அந்தகாரியம் நடந்திருக்கிறதாலே தன்னை அவர் கைவிடலாகாதென்றும் அப்படி அவர்கைவிடுவாராகில் தான் உயிரைமாய்த்துக்கொள்வதாயும் சொல்லினள். இதைக்கேட்ட பகவனானவர் தன்னுடைய பிராரர்த்தகர்மம் அப்படியிருந்தால்என்ன செய்கிறதென்று தமக்குள் நினைத்துக்கொண்டு ஆதியைப்பார்த்து "என்பேரில் உனக்கு ஆசையிருக்கும் பட்சத்தில் என்சொல்லின் பிரகாரம் நடக்க வேண்டியது. அதென்னவென்றால் உனக்கு எவ்வெவ்விடத்தில் குழந்தைகள் பிறக்கின்றனவோ அவைகளை அவ்வவ்விடத்திலேயேவிட்டு விட்டு வந்துவிட வேணுமென்றார்." அதற்கு ஆதியும் சம்மதித்தவளாய் அப்படியே யாகட்டுமென்றாள். அதன்பேரில் அவ்விருவரும் அன்றிரவு அம்மண்டபத்தில் கூடினார்கள். அப்போதுபிரமதேவருடைய பத்தினியாகிய கலைமகளார் அவருத்திரவினால் யாவராலும் புகழப்பட்ட தவப்பெண்ணென்று சொல்லும்படி பிறந்தாள். உலகோபகாரமாக அநேக நீதிகளையும் நன்மார்க்கத்தையும் கற்பித்து உலகத்தாரால் புகழப்படுகிற ஔவையார் என்றவர் இப்பெண்தான். இப்பெண்ணுக்கு ஔவையார் என்றபெயர் இருகாரணத்தால் கிடைத்ததென்று சொல்லப்படுகிறது. சிலர் ஓர் அசரீரிவாக்கினால் இப்பெயர் உண்டாயிற்றென்றும், வேறு சிலர் இவர் 240-வருஷங்களுக்கு அதிகமாய் ஜீவித்திருந்தபடியால் முதியவளென்ற பொருளையுடைய ஔவையார் எனப்பெயர்பெற்றார் என்றும் சொல்லுகிறார்கள். மறுநாள் தாய் தன் கணவனுக்கு வாக்களித்தபிரகாரம் நடக்கவேண்டிய தாகையால், அன்னையானவள் அக்குழந்தையை விட்டுப்பிறிய மனம் வராமல் வருந்தியபோது சேயாகிய ஔவையார் தாய் முகநோக்கி கீழ்வரும் வெண்பாவைச் சொன்னார்.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

இதைக்கேட்ட தாய் வருத்தநீங்கி குழந்தையை விட்டு விலகினாள். ஆகையால் இப்பேற்பட்ட மகிமை பொருந்திய ஔவையார் சரிதத்தை உரைப்போமாக. ஔவையார் இயல்பாகவே, சகலகலைகளையு மறிந்து கல்வியிற் தேர்ச்சியடைந்து ஆடவர் பெண்டிரிருவருள் முதன்மையாய்நின்று, நித்தம் விநாயகமூர்த்தியைபூஜை செய்துவந்தாள். இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் சைவசமயாசாரியர்களான சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

சேரமான் பெருமானாயனாரும் பொன்வண்ணத் தந்தாதி பாடி அதை அறங்கேற்றும் நிமித்தம் கயிலையங்கிரிக்குச் சென்றார்கள். போகும்போது ஔவையாருடன் சொல்லிவிட்டுப்போக அவரிடம்வர, அவர் அப்போது விநாயகபூஜை செய்துக்கொண்டிருந்தார். ஔவையார் அவர்களோடு போகும்நிமித்தம் பூஜையை விரைவாய் செய்தனர். அப்போது விநாயகமூர்த்தி ஔவையாரை வழக்கப்படிசெய்யாமல் விரைந்து பூஜை செய்யவேண்டிய காரணமென்ன வென்றுவினவ, அவர்தான் வந்திருக்கிறவர்களுடன் கயிலை செல்லும் நிமித்தம் சீக்கிரம் செய்வதாக மொழிந்தனள். இதைக்கேட்ட விநாயகர் ஔவையாரைநோக்கி "நீ கிரமப்படி பூஜைசெய், அவர்கள் கயிலையைச் சேருவதற்குமுன் நான் உன்னை அவ்விடத்தில் கொண்டுபோய் விடுகிறேன்" என்றார். ஔவையாரும் சாவகாசமாய்ப் பூஜையைசெய்துமுடித்தார், செய்துமுடித்தலும் விநாயகர் ஔவையாரை தமது துதிக்கையால் எடுத்து கைலையங்கிரியில் விடுத்தனர். பின்வந்த சமயாசாரியர்கள் இருவர்களில் சேரமான் பெருமானாயனார் ஔவையாரைநோக்கி பூஜைசெய்துக் கொண்டிருந்த நீர் இவ்விடம் எங்களுக்குமுன் எப்படி வந்துவிட்டீர்கள் என்றார். அதற்கு ஔவையார்

மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
யதிர நடந்திடு மியானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

என்றபாடலை விடைதந்து அவர்கள் அரங்கேற்றுதலுக்கிருந்து கேட்டு கைலாசபதியாகிய சிவபெருமானைத் தரிசித்து விநாயகமூர்த்தி கிருபையால் தம்மிருப்பிடம் சேர்ந்து, நித்தம் விநாயகரை பூஜை செய்துக்கொண்டு வந்தாள். அக்காலத்தில் கம்பரானவர் ஆயிரம்பொன் கொடுத்தா லன்றி ஒருவர்பேரிலும் பாடுகிற தில்லை. ஔவையாரோ ஒருகை கூழுக்குப் பாடுவதுண்டு. ஆகையால் ஔவையாருக்கு கூழுக்குப்பாடி என்றொரு பெயருமுண்டு.

சோழநாட்டிலே சிலம்பி என்றொரு தாசி இருந்தனள் அவள் கம்பர்வாக்கால் பாடியவருக்கு அதிகசெல்வமும் சம்பத்துமுண்டாகு மென்றுநினைத்து, கம்பரை தன்பேரில்ஒருபாட்டு பாடும்படியாக வேண்டினாள். கம்பர் தான் ஆயிரம்பொன்னுக்கு குறைந்து பாடமாட்டேனென்றார். அதன்பேரில் தாசிவியசனமுற்றுதான் வருத்தப்பட்டு சேர்த்துவைத்த, நகை, ஆடை முதலியவற்றையெல்லாம் விற்று 500-பொன்னாக்கி கம்பரிடத்தில் கொண்டுவந்து கொடுத்தாள். கம்பர் ஆயிரம் பொன்னுக்கு ஒருபாட்டுபாடுவது வழக்கமாகையால் 500 பொன்னுக்கு அரைபாட்டுதான் பாடுவேனென்று கீழ்வரும் இரண்டடியையும்பாடி அவள் தெருத்திண்ணையின் சுவரில் எழுதிவைத்து விட்டுப்போயினார்.

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே.

தாசியானவள் தன் ஆஸ்தியெல்லாம்விற்று கம்பருக்குக் கொடுத்துவிட்டதினாலே, உண்ணச்சோறும் கட்டக்கந்தையுமின்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். இப்படியிருக்கும்நாளில் ஔவையார் ஒருநாள் அதிகபசியோடு அவ்வழியாய் போய்க்கொண் டிருந்தபோது அதிக ஆயாசமாயிருந்தமையால் இத்தாசியினுடைய வீட்டுத்திண்ணையில்வந்து உட்கார்ந்து அவளைப்பார்த்து "எனக்குரொம்பவும் பசியாயிருக்கிறதென்றார்" உடனே அந்ததாசி உள்ளேபோய்தான் குடிப்பதற்காக வைத்திருந்த கரைத்தகூழை கொண்டுவந்து கொடுத்து மிகவும் உபசரித்தாள். ஔவையாரும் இளைப்புதீர்ந்து தலைநிமிர்ந்து சுவரில் எழுதியிருந்த இரண்டடியையுடைய பாடலைப்பார்த்து அதனுடைய வரலாற்றை தாசிமூலமாய் தெறிந்துகொண்டு,

—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

என்ற இரண்டடியைப்பாடி முன் இரண்டடியோடு சேர்த்து எழுதிப் பாட்டை முடித்தாள்.

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே-பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

இதன் அர்த்தமென்னவென்றால், காவிரிநதியே நதி, மாலையைத்தரித்த சோழராஜனேயரசன், சோழதேசமேதேசம், அழகியபொன்னையொத்த காந்தியையுடைய சிலம்பியென்னும் மங்கையின் தாமரை மலர் போன்ற பாதத்தணியப்பெற்ற செம்பொன்னாலாகிய சிலம்பே சிலம்பு.

இச்செய்யுளை எழுதி முடித்தவுடனேசிலம்பியானவள் காலில் செம்பொன்னாலாகிய சிலம்பைத் தரிக்கத்தக்கவளாய் செல்வவதியானாள். கம்பர் தான் 500-பொன்னுக்குப்பாடி தாசியை ஏழையாகச்செய்ததை ஔவையார் கொஞ்சம் கூழுக்குப்பாடி அதிக ஆஸ்தியையடையும்படி செய்தாளே என்றுவெட்க மடைந்தார்.

(இன்னும்வரும்.)

## மனோகரன்.

ஒருநாள்காலை மகததேசத்தில் சத்தியபுரி என்னும் பட்டணமானது பனியால்மூடப்பட்டு வெண்பட்டுத்தரித்த ஓர் பெண்ணைப்போல் விளங்கியது. சூரியனாகிய நாயகன் தன்கிரணங்களாகிய கரங்களால் சத்தியபுரியாகிய தன் புதுமணப்பெண்ணின் வெள்ளிய போர்வையை மெள்ளென இழுக்க, அக்காலத்தடிக்குங் காற்றால்மரங்கள் அசைவதானது, நாணத்தால் அப்பெண்மணிகதிரவன் கரங்களைத்தடுப்பதுபோல், அப்பனி நீக்கமானது தோன்றிற்று. பனிநீங்கவே பட்டணத்திலுள்ள பலகட்டடங்களும் பிரபுக்கள்மாளிகைகளும் அநேகவீடுகளும் அவைகளைச்சுற்றி யுள்ள பூஞ்சோலைகளும், அந்நகரின் பக்கமாயோடும் பம்பாநதியும் நன்றாய்ப் பிரகாசித்தன. பம்பாநதிக்கரையின்மீது உட்கார்ந்து தந்தசுத்தி செய்துக்கொண்டிருந்த ஓர் பெரியவர் தன் அருகாமையில் நின்றுக்கொண்டிருந்த சிறுவனைநோக்கி, ஏன் அப்பா! இன்றைக்கு என்ன விசேஷம்? என்று கேட்டார். ஐயா! இன்றைக்குப் பிரபுவின் சம்பந்திகளுக்கு விருந்து. இரவு தாசி விசாலாட்சியின் வீணைகச்சேரி, இதன் மத்தியில் சிறிது அகஸ்யம்நடக்கும். இன்றைய விசேஷம் இவ்வளவுதானென்று அச்சிறுவன்பதில் கூறினான். இதைக்கேட்ட அப்பெரியவர் சொல்லுகிறார். ஹேசம்பாதி! கல்லியாணமென்றால் உங்கள்பிரபு வீட்டுக் கல்லியாணந்தான் கல்லியாணம். பணமிருந்தாலும் அதைசெலவிடும் வகையெல்லாருக்கும் நன்றாய்த்தெரியாது. பந்துக்களை அதிகமரியாதையாக வரவழைத்து உபசரிக்குந் திறமையும், சிநேகிதர்களைக் கண்டவுடன் பிரியமுடன் அழைத்து விசாரிக்கும் அன்பும், பந்துவுமில்லாமல் சிநேகிதனுமில்லாமல் என்னைப்போல வந்திருக்கும் அநேகர்களை ஆதரவுடன் அழைத்த அங்கீகரிக்கும் நற்குணமும், ஏழைகளுக்கிரங்கி அவர்களுக்கு வேண்டியதை யளிக்கும் கொடையும் உங்களுடையசந்திரசேகரப் பிரபுவினிடத்து அமைந்திருப்பதுபோல் மற்றவரிடத்து நான் கண்டதில்லை. கல்லியாணம் நடந்து இன்றைக்குப் பதினைந்துநாள்கழிந்தும் இன்னும் பிரதிதினம் விருந்துசாப்பாடு நடக்கிறது. அநேக வரிசைகள் வருவதும் போவதுமா யிருக்கிறது. காலைமுதல் மாலைவரையில் மேளவாத்தியம் முழங்குகிறது. இரவில் நல்ல பாட்டுக்கச்சேரிகளும் ஆட்டக் கச்சேரிகளும் நடக்கின்றன. இப்படியாக நித்திய கல்லியாணம்போல் நடப்பது வெகு ஆச்சரியமென்று அப்பெரியவர் புகழ்ந்துபேசினார். இராமதாசரே! இவர்கள் வீட்டில் இந்தவிவாகம் இப்படிநடப்பது ஓர் ஆச்சரியமன்று. இப்போதிருக்கும் சந்திரசேகர பிரபுவின் பாட்டனார் இந்த மகததேசத்தை யாண்டுகொண்டுமகாராஜாவாக விருந்தார். யானைபடுத்தால் குதிரை உயரம் இருக்காதா என்று சம்பாதிகூறினான். ஆகா! அப்படியா, இவர்கள் இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களென்று எனக்குத் தெரியாது சம்பாதி. சந்திரசேகரன் பாட்டன் இராஜாவாயிருந்தால் இவர்கள் இராஜ்ஜியத்தை யிழந்துவிட்டதற்கென்ன காரணம்? என்று இராமதாசர் கேட்க, சம்பாதி கூறுகிறான். சந்திரசேகர பிரபுவின் பாட்டனார் அவரது முன்னோர்களைப்போல் மகததேசத்தை யறுபதுவருஷம் ஆண்டு, இராஜ்ஜியத்தைத் தன் பிள்ளையினிடத்து ஒப்புவித்து, மூதோர் சென்ற நெறியை யனுசரித்து, மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை யென்னும் மூவகையாசைகளையும் முற்றுந்துறந்து, காட்டிற்குச்சென்று தனியே யோர் ஆசிரமத்திலிருந்து பகவானிடத்து அந்தரங்கபக்தி செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கையில், இப்போது மகததேசத்தையாளும் சந்திரவதனனுடைய பாட்டன் சார்வபூமன் பழய விரோதத்தால் மகததேசத்தின்மீது படையெடுத்து யுத்தஞ்செய்து தேசத்தைப்பிடித்துக்கொண்டார். தோல்வியடைந்தபின் சந்திரசேகரரின் பாட்டனார் தன்புதல்வனை யழைத்துக்கொண்டு சார்வபூமனால் கொடுக்கப்பட்ட இந்த சத்தியபுரியில் சிலநாள் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர்காலத்திற்குப் பிறகு சந்திரசேகரரின் பிதா சந்திரசூடன் என்பவர் பிரபுவென்னும் பட்டம்பெற்று மகதவரசனுக்கு வருஷந்தோறும் கப்பங்கட்டிக் கொண்டு சிலநாள் வாழ்ந்து சந்திரசேகரனென்னும் புத்திரனைப்பெற்று பூலோகவாழ்க்கையைத் துறந்தனர். அன்றுமுதல் சந்திரசேகரபிரபு சத்தியபுரியை யாண்டுகொண்டு வருகிறார். இவ்வளவுதான் எங்கள் பிரபுவினுடைய பூர்வசரித்திரமென்று சம்பாதிகூறி, இராமதாசரை சீக்கிரம் ஸ்நானஞ்செய்து அனுஷ்டானம் முடித்துக்கொண்டு பிரபுவின் வீட்டுக்கு வரவேண்டுமென்று சொல்லி விரைவாக நடந்தான்.

சம்பாதி என்பவன் சத்தியபுரியின் சிற்றரசனாகிய சந்திரசேகர பிரபுவினுடைய வேலைக்காரர்களில் ஒருவன். இவன் இருபத்தைந்து வயதுள்ளசிறுவனானாலும் நல்லபுத்திசாலி யாதலால் உலகத்தை நன்கறிந்தவன். மனிதர்களைப் பார்க்கும்போதே அவர்களுடைய கருத்தின்னதென்று உணரும் சக்தியுள்ளவன். நற்குணமும் நன்னடைக்கையு முள்ளவர்களைநோக்கும் பரமநேயன். தன் எஜமானனைத் தெய்வம்போலெண்ணி சகலவேலைகளையுஞ்செய்யு மியல்பினன். இவனுடைய முன்னோர்கள் மகத இராஜாங்கத்தில் சேவகஞ்செய்து பிழைத்தவர்களாதலால் அவர்கள் மூலமாக சம்பாதி மகத அரசர்

களுடைய சரித்திரத்தை நன்கறிந்தவன். வேலைக்காரனாயிருந்தபோதிலும் உலகநடவடிக்கையை நன்றுணர்ந்தவனாதல்பற்றி எவரெவர்களுக்கு எப்படி நடக்கவேண்டுமோ அது அவனுக்கு நன்றாய்த்தெரியும். அவனிடத்தில் சந்திரசேகரப்பிரபுவுக்கு அதிகப்பிரியமுண்டு. அவனுடன் பேசிக்கொண்டிருந்த இராமதாசர் என்பவர் ஓர் யாத்திரிகர். அவர்சத்தியபுரிக்கு வந்தகாலத்தில் சந்திரசேகரருக்கு விவாகம் நடக்கும் காலமாயிருந்தது. சத்தியபுரியில் வசிப்பதற்கு சௌக்கியமா யிருப்பதாலும், சம்பாஷிப்பதற்கு நல்ல ஜனங்களிருப்பதாலும் சிலநாள் அவர் அவ்வூரிலேயேதங்கினார். அவர்சிறந்த பக்தரா யிருப்பதைக்கண்ட சம்பாதி அவரைநெருங்கினான். தன் பிரபுவின் கல்லியாணத்திற்கு அவரைகூட்டிக்கொண்டுபோய் உபசரித்து வந்தான்.

சத்தியபுரிக்குச் சமீபமாக இரண்டுமைல் தூரத்தில் ஓர் காடுள்ளது. சம்பாதியும் இராமதாசரும் பம்பாநதிக் கரையின்மீது பேசியபன்று சாயந்திரம் அந்தக் காட்டின்வழியாக ஓர் ஸ்திரி சத்தியபுரியைநோக்கிவந்துகொண்டிருந்தாள். அவள்பார்ப்பதற்கு சுமார் முப்பது வயது சென்றவளாய்த்தோன்றுவாள். அவள்முகத்தின் அழகையும், சாதாரணமான ஓர் ஆடையைத் தரித்து அதன்மேல்துப்பட்டியால் அவள் போர்த்துக் கொண்டிருப்பதையுங்கண்டால், அந்தஸ்திரி நல்ல அந்தஸ்தியிலிருந்தவளாயும், ஏதோ ஓர் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள மாறுவேஷம்பூண்டவளென்று அறியலாம். அவள் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டும், சிறிது தூரம் விரைவாகநடந்தும் சிறிது தூரம் மெள்ளநடந்தும் வருவதைநோக்கின் யாராவது தன்னைப் பின்தொடர்ந்து துரத்திக்கொண்டு வருவார்களோவென்று ஐயமுற்று அஞ்சிநடப்பவள்போல காணப்படுவள். அங்கங்கே சிறிதுநின்று பெருமூச்சுவிட்டு, ஆகா! தெய்வமே! இப்படியுமாகுமா வென்றலறும்போது கேட்டவர்கள், ஏதோகொடியதுன்பம் அவளுக்கு நேரிட்டிருக்க வேண்டுமென்று எண்ணுவார்கள். அவள்கையில் ஏதோ ஒன்றை வஸ்திரத்தால் மறைத்து ஏந்திக்கொண்டு நடந்தாள். சத்தியபுரிக்குச் சமீபமாகவரும்போது வஸ்திரத்தைநீக்கி கையிலிருந்தவஸ்துவைநோக்கி, இன்னும் நித்திரைபோகிறாயோ? உன்னை அங்கேயே கொன்றுவிடாமற் போனேனேயென்றுசொல்லி அதை உடனே வஸ்திரத்தால் மூடிக்கொண்டு விரைவாகநடந்தாள். அவள் கையிலேந்திக் கொண்டுவந்தது பன்னிரண்டு மாதஞ்சென்ற ஓர் ஆண்குழந்தை. சத்தியபுரிக்கு இன்னும் சமீபமாக வரும்போது சூரியனும் இவளுக்கு உதவி செய்பவன்போல் அஸ்தமித்துவிட்டான். சிறிது இருளாயிருந்தபோதிலும், அவ்வூர்ஜனங்கள் வருவதையும் போவதையுங்கண்ட அவள் அஞ்சினவளாய் கையில் மூடிவைத்திருக்கும் குழந்தையை ஏதோ ஒருமூட்டையை எடுத்துக்கொண்டு போகிறவள்போல நடந்தாள். ஓரிடத்தில் சிறிதுநேரம்நின்று இந்தமூட்டையை எங்கே அவிழ்ப்பேனென்றெண்ணிப் பெருமூச்செறிந்தாள். மறுபடியும் நடந்து அநேகவீதிகளைத்தாண்டி பிரபுக்கள் வசிக்கும் வீதியில் வந்துகொண்டிருக்கையில் ஓர் வீட்டில் மேளவாத்தியம் வாசிக்கக்கேட்டாள். அவ்வீட்டினருகிற்சென்று பார்த்தபோது அதுவெண்சுதை தீற்றி மிகவும் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட ஓர் பெரிய பிரபுவின் வீடாயிருந்தது. அவ்வீட்டில் கூட்டம் நிறைந்து அதிகசந்தடியா யிருப்பதைக்கண்டு அது ஓர் கல்லியாண வீடென்றறிந்து, அவ்வீட்டுக்கருகாமையில் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து நின்றுகொண்டு இதுதான் நல்லசமயம், இந்தவீட்டில்புகுந்து இச்சுமையை இறக்கிவிடவேண்டுமென்று தீர்மானித்தாள். மேளவாத்தியம் நின்றது. அநேகபுருஷர்களும் ஸ்திரிகளும் நல்லாடையாபரணங்களை யணிந்து கும்பல் கும்பலாய் வந்து கல்லியாண வீட்டிற்குள் சென்றார்கள். முதலில் எண்ணியவண்ணம் அந்தஸ்திரியானவள் கும்பலுடன் கலந்துகொண்டு ஒருவரும் தன்னைப்பாராவண்ணம் அதிக தந்திரமாய் உட்சென்று ஜனக்கூட்ட மில்லாதிருக்குமிடத்தை நாடினாள். அச்சமயத்தில் அவ்வீட்டிலுள்ளவர்கள் மேன்மாடியில் நடக்கும் அகஸ்யத்தைக் கேட்கச் சென்றதால் சமயற்கட்டில் ஒருவரு மில்லாதிருப்பதைக்கண்டு அவ்விடத்திலிருந்த ஓர் அரையில் கையிலிருந்த குழந்தையை படுக்கவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் மறுபடியும் வெளியேசென்றாள்.

மேன்மாடியில் அகஸ்யம்முடிந்து சபைகலைந்தவுடன் அநேகர் கீழிறங்கிவந்து வெளியே சென்றனர். சிலர் அன்றிராத்திரி போஜனஞ்செய்ய அவ்விடத்திலேயே தங்கினர். அவ்வீட்டுப்பிரபுவானவர் தன்வேலைக்காரர்களில் ஒருவனைப்பார்த்து, ஹேசம்பாதி! சீக்கிரம் போஜனத்திற்கு ஏற்பாடுசெய். பிரபுக்கள்காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுசொன்னார். அப்படியே மகாப்பிரபோ, இதோமுடிந்தது என்று அதிகவினயத்துடன்சொல்லி துரிதமாகச் சம்பாதி மேன்மாடியை விட்டுக் கீழிறங்கி, மூன்றாவது கட்டிற்குச்சென்று சமையற்காரர்களுக்குவேண்டிய உத்திரவையளித்தான். அக்காலத்தில் சமையற்காரர்களில் ஒருவன்விருந்து சாப்பாடு தயார்செய்யும் அவசரத்தில் அங்கு மிங்குமாக ஓடிக்கொண்டிருக்கையில் ஓர் அரையில் நுழைந்தான். அவ்வரையில் ஓர் சிறியகுழந்தை படுத்திருப்பதைக்

ண்டு ஆச்சரியங்கொண்டு, இதுயார்குழந்தை, இவ்விடத்திலிருப்பானேன், தனியே இக்குழந்தையை யார் விட்டிருப்பார்கள், ஸ்திரிகள் இவ்விடம் வருவதில்லையேயென்று பலவாறுயோசித்து அக்குழந்தையினருகிற் சென்று அதனுடைய ரூபத்தையும் அழகையுங்கண்டு அதிசயித்து அச்சமயத்தில் அது தூங்கிக் கொண்டிருக்கிறதென்றும் அறிந்தான். அவன் எந்த வேலையாக அவ்வறையிற் சென்றானோ அதைமறந்தவனாய் வெளியேவந்து சம்பாதியினிடத்துச் சங்கதியைச் சொன்னான். அக்காலத்து தன்னுடன் பேசிக்கொண்டிருந்த பெரியவருடன் சம்பாதி அவ்வரைக்குள்சென்று குழந்தையைப்பார்த்து சற்று நாழிகை ஒன்றும் பேசாமல் யோசித்திருந்து பிறகு, இராமதாசரே! இக்குழந்தையைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகா யிருக்கிறதென்று சொன்னான். ஆமாம், வெகு அழகாய்த்தானிருக்கிறது. இதுயாருடைய குழந்தையென்று இராமதாசர் கேட்டார். அதைத்தான் கண்டுபிடிக்கவேண்டும். எங்களுடைய பிரபுவீட்டில் குழந்தைகிடையாது என்று சம்பாதிசொல்ல, குழந்தையைப்பார்த்தால் இராஜவம்சத்தைச்சேர்ந்ததென்று தோன்றுகிறது, சுமார் ஒரு வயதிருக்கலாம், இக்குழந்தை தனியே இங்கேவரவேண்டிய காரணமென்னவென்று இராமதாசர் கேட்டார். இன்றையதினம் வந்த பிரபுக்கள் யாராவது இங்கே தூங்கவிட்டார்களோவென்றால் இவ்வளவு அருமையான இளங்குழந்தையை தனியே விடமாட்டார்கள், ஒருவேளையாராவது துஷ்டர்கள் அதன் தாய்தந்தையர்களுக்குத் தெரியாமல்கொண்டுவந்து அதன் நகைகளை கழற்றிக்கொண்டு இவ்விடம் தனியே விட்டிருக்கலாமென்று எண்ணுகிறேனென்று சம்பாதிகூறவும், அப்படித்தானிருக்க வேண்டுமென்று இராமதாசரும் ஒத்துக்கொண்டனர். அக்காலத்தில் பிரபுக்கள் சாப்பிடுகிற சமயமாயிருந்ததால் குழந்தையைக்குறித்து பிரஸ்தாபிக்க நல்லதருணமல்லவென்று பிறகுதெரியப் படுத்தலாமென்றெண்ணி இராமதாசரை அக்குழந்தையினிடத்து உட்காரச்செய்து சம்பாதி பிரபுக்கள் போஜனஞ்செய்து கொண்டிருந்த விடத்திற்குச் சென்றான்.

அன்றிராத்திரி அவ்வீட்டில் அனைவரும் உண்டபின் வீணைக்கச்சேரி நடந்தது. பிறகு சபை கலைந்து அவர்கள்தத்தம் வீடுசென்றார்கள். பிரபுவின்வீட்டிற்கு வந்த பந்துக்கள்மாத்திரம் படுக்க அவ்விடத்திலேயே தங்கினர். எல்லாரும் படுக்கைக்குப்போக சமயம்வந்துவிட்டது. அதுவரைக்கும் குழந்தையைக் காணோமென்று ஒருவரும் சொல்லவில்லை. அக்குழந்தையைக் காத்துக்கொண்டிருந்த இராமதாசர் ஓர் தாதியை வரவழைத்து அதற்குபால் கொடுப்பித்தனர். பிறகு சம்பாதி அவ்விடம்வந்து, இராமதாசரே! இதென்ன ஆச்சரியம், ஒருவராவது குழந்தையைத் தேடவில்லையே; சந்திரசேகரபிரபு பள்ளியரைக்குச்சென்றார். அவரிடத்து இந்தசெய்தியைச் சொல்ல எனக்கு நல்ல சமயம் அகப்படவில்லை யாதலால் நாளையதினங் காலையில்தான் தெரிவிக்க வேண்டுமென்றுசொல்லி, அக்குழந்தைக்கு இலட்சுமியென்னும் தாதியைக்காவல்வைத்து இராமதாசரை யழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றனன்.

மறுநாட்காலை சந்திரசேகர பிரபுவின்வீட்டு மேன்மாடியில் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தனர். அவர்கள் மத்தியில் ஓர் ஸ்திரி ஆண்குழந்தை யொன்றை இடுப்பில்வைத்துக் கொண்டிருந்தாள். சிலர் அக்குழந்தையினருகில் வந்துபார்த்து அதிசயித்து தலையசைத்து மூக்கின்மேல் கைவைத்தனர். சிலர்குழந்தையின் அழகைவர்ணித்தார். குழந்தையைப் பார்த்த வண்ணமே சிலர் பேசாதுநின்றனர். அப்பாலகன் அழகைக்கண்டு எடுத்துமுத்தமிட சிலர் ஆசைப்பட்டனர். முத்தமிட்ட சிலர் குழந்தையின் கன்னம் சிவந்ததைக் கண்டு மனந்தளர்ந்தனர். இவ்வருமையான குழந்தையைப்பிரிந்த தாய் தந்தையர்கள் என்னசெய்வார்களோவென்று சிலர் மனநொந்தனர். இவ்வாறிருக்கையில் பேசும் சத்தம் அடங்கிற்று. உடனே அக்குழந்தையை வைத்துக்கொண்டிருந்த ஸ்திரியானவள் அவ்விடத்து விரித்திருந்த இரத்தினகம்பளத்தின்மீது குழந்தையை உட்காரவைத்து சிறிதுதூரம் ஒதுங்கிப்போய் நின்றனள். உட்கார்ந்திருந்தவர்களில் சிலர் எழுந்து நின்றனர். சுமார் இருபத்தைந்து வயதுள்ளவராயும், அகன்றமார்பில் இரத்தினங்களிழைத்த ஆபரணங்களையணிந்தவராயும், விசாலமான கண்களில் கருணைநிறைந்தவராயும் ஒருவர்வந்தார். அவரைக்கண்டவுடன் சம்பாதி அதிகவணக்கத்துடன் கைகூப்பிநின்று, மகாப்பிரபோ! இக்குழந்தை நேற்றிராத்திரி நமது மாளிகையில் மூன்றாவது சமையற்கட்டில் ஓர் அரையில் தனியே விடப்பட்டிருந்ததைக்கண்ட சுயம்பாகிகளில் ஒருவன் என்னிடம்சொல்ல, நானும் இராமதாசரும் போய்ப் பார்த்தோம். அப்பொழுது குழந்தை நித்திரைசெய்து கொண்டிருந்தது. இதுவரைக்கும் குழந்தை இன்னாருடையதென்று தெரியவில்லை. இந்தசமாச்சாரத்தை தங்களுக்கு நேற்றிராத்திரியே தெரிவிக்க சமயம் அகப்படவில்லையென்று அதிகவினயத்துடன் சொன்னான். இதைக்கேட்ட சந்திரசேகரர், இதென்ன புதுமையென்றுசொல்லி, குழந்தையினருகிற்சென்று பார்த்தார்.

உடனே மந்திரி சுதந்திரனை அழைத்துவர பிரபு கட்டளையிடவும் சம்பாதி உடனே சென்றான். குழந்தையை நன்றாகப்பார்த்து பிரபுவானவர் மிகவும் அதிசயித்து அக்கணத்தில் அவ்விடம் வந்த இராமதாசரை நோக்கி, ஐயா, பக்தசிகாமணியே! இக் குழந்தையைப் பாருங்கள் என்றுசொல்லி, நீங்கள் என்ன நினைக்கிறீர்களென்றுகேட்டார். சந்திரசேகரப் பிரபோ! நேற்றிராத்திரி இக்குழந்தையைத் தங்கள் மாளிகையில் கண்டேன். குழந்தையைப்பார்த்தால் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்ட பிரபுக்கள் குழந்தையென்று நன்றாக விளங்குகிறது. யாரோ துஷ்டர்கள் சிறிது நகைக்கு ஆசைப்பட்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வந்திருக்கவேண்டும். கோரியநகைகள் கிடைத்தவுடன் குழந்தையை தங்கள் திருமாளிகையில் விட்டது குழந்தையின் அதிர்ஷ்டமென்று எனக்குத் தோன்றுகிறது. வேறு இதைக்குறித்து யார்தான் என்னசொல்ல முடியும் என்று இராமதாசர் பேசிக்கொண்டிருக்கும்போது காலடி சப்தங்கேட்டது. உடனே சுதந்திர மந்திரியும் சம்பாதியும் வந்தார்கள். பிரபுவானவர் மந்திரியைநோக்கிக் குழந்தையின் வரலாறைக் கூறி இனிச் செய்ய வேண்டியதென்னவென்று கேட்கும்போது, அவ்வழகிய குழந்தை மெள்ள தவழ்ந்து கொண்டு வந்து தன் இருகரங்களாலும் அருகில்நின்ற சந்திரசேகரப் பிரபுவின் காலைப்பிடித்துக்கொண்டு நின்று அண்ணாந்து அவரது முகத்தைப் பார்த்துச் சிறித்தது. இதைநோக்கியபிரபு சந்தோஷங்கொண்டு இளங்குழந்தையின் மெல்லிய கரங்கள் தன்தேகத்திற்படவும் மெய்மறந்தவராய் அக்குழந்தையை வாரியெடுத்து மார்பிலணைத்து முத்தமிட்டனர். உடனே இராமதாசர், இந்தக்காட்சி எனக்கு மிகவும் ஆனந்தமா யிருக்கிறதென்றுகூறி நகைத்தனர். அப்போது சுதந்திரன், இராமதாசரே! கொஞ்சம் விவரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டான். உடனே இராமதாசர் சொல்லுகிறார். மகாப்பிரபோ! நடந்த விவாகத்தில், தங்களுக்கும் இரதியம்மணிக்கும் பெரியோர்கள் அநேக ஆசீர்வாதங்கள் செய்தார்கள். அவைகளில் தங்களுக்கு சீக்கிரம் புத்திர சந்தானம் உண்டாகவேண்டுமென்பது ஒன்று. தங்களிடத்து இக்குழந்தை தவழ்ந்துவந்து பாதங்களைப்பிடித்து நின்றதையும், அக்கணத்தில் தாங்கள் இருகரங்களாலும் அதை அன்புடன் வாரியெடுத்துக் கொண்டதையும் காணும்போது பகவானது கிருபையால் அப்பெரியோர்கள் ஆசீர்வாதம் அதிசீக்கிரமாய்ப் பலித்து விட்டதென்று ஆனந்தங்கொண்டேன். மறுபடியும் இக்குழந்தையின் உண்மையான வரலாறு எனக்கு ஞாபகம்வரவே என்னமூடத்தனமா யெண்ணினேனென்று நகைத்தேன். இதைத்தவிர வேறொன்று மில்லையென இராமதாசர் சொல்லிமுடித்தார். இதைக்கேட்ட சுதந்திரன் ஐயா, இராமதாசரே! எனக்கு வேறொருவிதமாய்த்தோன்றிற்று என்றான். அதுவென்னவென்று சந்திர சேகரர் கேட்க சுதந்திரன் சொல்லுகிறான். இந்தக்குழந்தை நமது பிரபுவினுடைய பாதத்தைப் பிடித்து அவரது முகத்தை நோக்கியதைக் காணும்போது தான் நிராதரவாயிருப்பதையறிந்து பிரபுவின்பாதத்தில் சரணமடைந்து தன்னைக்காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சிக்கேட்பதுபோலும், உடனே பிரபுவானவர் அதையெடுத்து மார்பிலணைத்துக் கொண்டதானது, அப்படியேகாப்பாற்றுகிறேன் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டா மென்று தைரியம் சொல்லியதுபோலும் எனக்குத்தோன்றிற்று என்று சுதந்திரன் சொல்லியதை செவியுற்றப் பிரபுவானவர் உள்ளமகிழ்ந்து மந்திரி குறிப்பாகக் காட்டியவண்ணம் தான் அக்குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று நிச்சயித்து, மந்திரியைநோக்கி, இப்போதுஎன்ன செய்யலாம், இக்குழந்தையின் தாய் தந்தையர்களைக் கண்டு பிடிக்கவேண்டுமே அதற்கு என்னயுக்தி என்று கேட்டார். சுவாமி! நாம் எல்லா தேசத்தரசர்களுக்கும் தூதுவர்மூலமாக செய்தியைத் தெரிவிக்க வேண்டும். அந்த இராஜாக்கள் தங்கள்தேசத்தில் வீதிகள்தோறும் பறையடித்து ஜனங்களுக்குப் பகிரங்கமாய் விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும். இதைத்தவிர வேறொரு மார்க்கமில்லை. இக்குழந்தைக் குரியவர்கள். இன்னாரென்று ஏற்படுகிறவரையில் தாங்களே குழந்தையை வளர்த்து வரவேண்டுமென்று மந்திரி கூறினான். பிறகு இராமதாசர் மகாப்பிரபோ! கண்டவர்மனதைக்கவரும் இக்குழந்தைக்கு மனோகரன் என்று பெயரிட லாமோ என்றுசொல்ல, பிரபுவும் மந்திரியும் அப்பெயரை அங்கீகரித்தார்கள். மந்திரிசொல்லிய வண்ணமே எல்லா தேசத்தரசர்களுக்கு கடிதம் அனுப்பும்படி பிரபு கட்டளையிட்டு, மனோகரனை சௌக்கியமாய்க் காப்பாற்றுவதற்குத் தகுந்த ஏற்பாடுசெய்தார்.

(இன்னும்வரும்.)

## குருசிஷ்யன் சம்பாஷணை.

சிஷ்யன்— சிவன் ஆணோ? பெண்ணோ? அலியோ?

குரு— நீ சொன்ன மூன்றும் அன்றென்பதே சித்தாந்தம்.

சிஷ்யன்— ஆனால், 'பெண்ணாகி யாணயலியாய் பிறங்கொளிசேர், விண்ணாகி' என்று கூறியிருப்பானேன்.

குரு— 'ஆணல்லன் பெண்ணல்ல னல்லாவலியுமல்லன்' என்றுங் கூறப்பட்டிருக்கிறதே.

சிஷ்யன்— ஓகோ! இது வைஷ்ணவ ஆழ்வார்களிலொருவர் விஷ்ணுவைக் குறித்துக் கூறினது. சிவனைக்குறித்து சிவனடியார்கள் அப்படிக் கூறினதுண்டோ?

குரு— ஆகா உண்டு. 'வீணைச் சுழலுமெனக் கொரு ஞானவிழி யளித்துக், கோணகத்துள் ளொரு கூத்தப்பிரானுண்டக் கூத்தப்பிரான், ஆணவது மன்று பெண்ணவது மன்றலியுமன்று, காணுக்கண்கொண்டினிக் காணியென்றான் சச்சியேகம்பனே' என்னும் வசனமு மிருக்கிறது.

சிஷ்யன்— ஆணுமியும் பெண்ணுமியும் அலியாகியும் என்றும் ஆணல்ல பெண்ணல்ல அலியல்லவென்றும் கூறினல், ஒருபொருளுக் கிரண்டு தன்மையு முண்டோ?

குரு— உண்டு இல்லை யென்பன இரண்டும் பெத்தமிலே.

சிஷ்யன்— ஆனல் அந்தச்சிவன் எங்கேயிருப்பார்?

குரு— கயிலாயம், காசி, காஞ்சி முதலிய தலங்களிலிருப்பார்.

சிஷ்யன்— சிவன் எங்கும் வியாபி, சர்வேந்திரியாமி சர்வபரிபூரணன், சர்வசாட்சி, என்றுகூறக் கேட்டிருக்கிறேனே. அப்படியிருக்கநீரேன் சிலவிடங்களைக் குறிக்கிறீர்?

குரு— பசுவுக்குப் பால் சரீரமெங்குஞ் சமமாய்ப் பரவியிருந்தாலும் ஸ்தன்னியத்தின்வழியாய் வெளிப்படு மாறுபோலக் கயிலை முதலிய தானங்களிலேயும் ஞானிகள் சித்தத்திலேயும் வெளிப்படுவர்.

சிஷ்யன்— (மறுபடியும்) அந்தச்சிவன் எங்கே யிருப்பார்?

குரு— எங்கு மிருப்பார்.

சிஷ்யன்— எங்குமிருந்தால் எனக்குத் தெரிய வில்லையே?

குரு— எங்குமிருப்பவர் நின் அறிவிலேயு மிருப்பார்.

சிஷ்யன்— எந்த அறிவிலே?

குரு— சுட்டறிவுக் கெட்டாத சுகாதீத அறிவிலே.

சிஷ்யன்— அந்த அறிவுவேறு நான்வேறோ?

குரு— அந்த அறிவு நீ தான்.

சிஷ்யன்— அந்த அறிவு நானுயிருந்தால் எனக்குத் தெரியாதோ?

குரு— அங்கிங் கென்னுதபடி யெங்குமெல்லாமாயிருப்பதை பகிர்முகமாய்ச் சென்று சுட்டியறிவதினலே தெரியாது.

சிஷ்யன்— பகிர்முகமாய்ப் போவதைவிட்டு அகமுகமாய்த் திரும்பினல் தெரியுமோ.

குரு— அகமுகமாய்ப்பார்த்து பின்பு கேள்.

சிஷ்யன்— ஆனல் அந்த அறிவு வேறுதானே?

குரு— பகிர்முகமாய்ச் செல்லும் பழக்கம் விடுத்து பறப்பற்று சும்மாயிருந்து அகமுகமா யனுபவித்தால் தெரியும்.

சிஷ்யன்— நீர் சொன்னபடி அனுபவித்தவர் உண்டோ? அவர்கள் யார்?

குரு— ஆகா உண்டு. சுகர், வாமதேவர், திருமூலர், நந்தி, சிவவாக்கியர், அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சடகோபர், பட்டணத்தார், பத்திரகிரி முதலிய மகாத்துமாக் களெல்லாம் அனுபவித்தவர்கள்.

சிஷ்யன்— அனுபவித்த அவர்கள் அனுபவத்தைச்சொன்னதுண்டோ?

குரு— ஆகா பலதரம் சொல்லி யிருக்கிறார்கள். உற்றுக் கவனிப்பவர்கள்தா னில்லை.

சிஷ்யன்— எப்படி சொன்னார்கள். எதோ சிலவசனம் சொல்லுங்கள்.

குரு— ஆகா! இனிச் சொல்லுகிற பாட்டைக் கவனி.

"சிவனைநான் சிந்தையுட் கண்டவாறே."

"தேடிக் கண்டுகொண்டேன் திருமாலோடு நான் முகனுந், தேடியுந் தேடொணுத் தேவனை யென்னுள்ளே, தேடிக்கண்டு கொண்டேன்."

"உள்ளத்தி னொளியைக் கண்டதுள்ளமே."

"மாயனென் னெஞ்சினுள்ளான் மற்று மெவர்க்கு மதுவே."

"கமலக் கண்ணனென் கண்ணினுள்ளான் காண்பனவன் கண்களாலே, அமலங்களாக விழிக்கு மைம்புலனு மவன்மூர்த்தி, கமலத் தயனம்பிதன்னைக் கண்ணுதலானேடுந் தோற்றி, அமலத் தெய்வத் தோடுலகமாக்கி யென்னெற்றியுளானே."

## வெள்ளைக்குரங்கும் - குள்ள நரியும்.

முன்னொருகாலத்தில் ஒருகுள்ளநரியுடன் வெள்ளைக்குரங்கொன்று கூடி சினேகஞ் செய்துக்கொண் டிருந்தது. இப்படியிருக்கையில் ஒருநாள் நரியானது மனிதர் மாமிசம் - தோல் - நரம்பு - எலும்புகளைக்கடித்துத் தின்னும்போது குரங்குபார்த்து ஓ - நரியே, நீபூர்வஜன்மத்தில் என்னபாவம்பண்ணினாய் நாயுந்தீண்டாத நரவுடலைப் பிடுங்கித் தின்கிறையே யென்றது - அதற்கு நரியானது "ஐயாகுரங்கே நான்முன்பிறப்பில் ஒருபிராமணனுக்குச்சிறிது திரவியங் கொடுக்கிறேனென்று, ஆசைவார்த்தைசொல்லி நாளைக்காகட்டும் நாளைக்காகட்டும் என்று சொல்லிக்கொண்டுவர, கடைசியில் நாளையென்னும் நாள் நமனுடைய நாளாய்விட்டபடியால் மோசம்போனேன். அந்தப்பாவத்தினால் இந்தச்ஜெனனமெடுத்தும் பூர்வக்யியானத்துடன் சொல்லுகிறேன்" என்றது. அதைக்குரங்குகேட்டு இப்படியா உன்பூர்வோத்திரமென்று போய்விட்டது. ஆகையால் பூமியிலேயாவனொருவன் பூர்வபுண்ணியவசத்தால் பொருளுடைத்தாயிருப்பானாகில் பிராமணன்முதலிய ஏழைகளுக்குச் சொல்லியபோதே கொடுத்துவிடவேணும். அப்படிக்கில்லாமல் கொடுக்கிறேனென்று பேராசைகாட்டி பிற்பாடு கொடுக்காமலும் இன்றைக்கு நாளைக்கென்றும் இழுத்தலைக் கழிப்பானாயின் அவனுக்கே பிணந்தின்னுகின்ற நரியாகிய பிறப்பு கிடைக்கும்.

---

## மூன்று புத்திசாலிப் பிள்ளைகள்

நெடுநாளைக்குமுன் ஒருரில் ஓர் அரச னிருந்தான். அந்த அரசனுக்கு மூன்றுகுமாரர்கள் உண்டு. ஆனால் அரசன் இம்மூவரிடத்திலும் ஒரேமாதிரி பிரீதியை வைத்திருந்தான். அரசன் மூவரிடத்திலும் ஒரேமாதிரி ஆசையை வைத்திருந்தபடியால் தன் காலத்திற்கு பிற்காலம் இராஜ்ஜியத்தை யாருக்கு கொடுக்கிறதென்று அவனுக்கு புரியவில்லை. கடைசியில் அரசன் தன் மரணந்ததிசையில் குமாரர்கள் மூவரையும் அழைப்பித்து உங்களில் யார் முதல்தரமான சோம்பேரியோ அவன்தான் தனக்குப்பின் இராஜ்ஜியத்திற்கு வரவேண்டுமென்றான். அதற்கு மூன்று புத்திரர்களும் கீழ் வருமாறு பதிலளித்தனர்.

முதல்பிள்ளை.

ஐயா! "இராஜ்ஜியம் எனக்குதான் சேரவேண்டியது, ஏனென்றால் நான் தூங்கவேணுமென்று படுத்துக்கொள்ளும்போது, கண்ணில் ஏதாவது ஜலத்துளி விழுந்தால்கூட கண்ணை மூடிக் கொள்ளும்படியான கஷ்டத்தை கண்ணுக்கு கொடுக்க மாட்டேன்" என்றான்.

இரண்டாவது பிள்ளை.

"அப்பா! ராஜ்ஜியம் எனக்குதான் சேரவேண்டியது நியாயம். ஏனென்றால், வாழைப்பழத்தை கஷ்டப்பட்டு தோலைநீக்கி சாப்பிடுகிறதைப் பார்க்கிலும் அப்படியே தோலைநீக்காமல் சாப்பிடுவேன்" என்றான்.

மூன்றாவது பிள்ளை.

தகப்பனாரே! "என்தமயன்மார் இருவரைக்காட்டிலும் எனக்குதான் ராஜ்ஜியம்கிடைக்கவேண்டியது. என்னகாரணத்தைப் பற்றியென்றால் யாராவது என்னை தூக்குக்கயிற் றில்கழுத்தைமாட்டி கத்தியை நோக்கினால், கையைதூக்கி கயிற்றை அறுப்பதைப்பார்க்கிலும் சும்மாயிருப்பதே நலமென்றிருப்பேன் என்றான். இப்படியாக ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பெருமையைப் புகழ்ந்தார்கள். இம்மூவருடைய சாமர்த்தியத்தையும்கேட்ட அரசன் மூன்றாவது பிள்ளையைப்பார்த்துநீ தான் சோம்பேரித் தனமென்னும் கடலினுடைய கரைகண்டிருக்கிறாய். உயிரைக்கூட லட்சியம் செய்யாதவனா யிருக்கும்படியான அவ்வளவு சோம்பேரித்தனம் மேற்கொண்டிருக்கிறது. ஆகையால் நீதான் என் பின் ராஜ்ஜியபரிபாலனம் செய்யவேண்டிய தென்றார்.

---

# NEWS AND NOTES.

## பலதேசவர்த்தமானங்கள்

### சுரங்கப்பொன்னுக்கு ஒருதுணிவர்த்தகன் ஏமாந்தான்.

உரிசம் கிராமத்தில் அநந்தபூர்ஜில்லா தாடிபத்திரிகாரன் ஒருவன் துணிகள் விற்கப்போனான். இவனிடத்தில் சுமார் 70-ரூபாய் துணிகள் இருந்தன. சுத்தம் பண்ணாத சுரங்கப் பொன்கட்டி ஒன்று அந்தத்துணி வியாபாரிக்கு அவ்வூர் சில போக்கிரிகள் காண்பித்து அவன் துணிகளையெல்லாம் வாங்கிக்கொண்டு அந்தப் பொன்கட்டியை துணிகளுக்குப்பதிலாய்கொடுத்துவிட்டு போய்விட்டார்கள். அந்தக் கட்டியை அவ்வர்த்தகன் வாங்கிக்கொண்டு அப்பால்போய் அதைபரிசோதிக்கும் போது அதுவெரும் பித்தளைக்கட்டியாயிருந்தது. அப்போது அவன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கண்ணீர் தாரைதாரையாய் விட்டான். ஓவென்று கதறி அழுதான், தன் துக்கத்தைபோலீஸ் அதிகாரிக

ளுக்கும் தெரிவித்தான். உபயோகமில்லாமல் போய்விட்டது. ஐயோ! பாவம்.

---

### இருண்டவன்கண்ணுக்கு மிரண்டதெல்லாம் பயம்.

சையாம் நாட்டில் புதிதாய் ஒரு வெள்ளைக்காரன் வந்தான். அவன் எல்லாரையும்போலவே வெகுகாலமாய் தனக்கு சினேகமாயிருந்த ஒருவன் வீட்டிற்கு வந்தான். இராத்திரி 8-மணிக்கு அந்த புதியவன்தான் வீட்டிற்குபோகிறேனென்றுபுறப்பட்டான். அப்போது பழையமனிதனும் அவன்பின்னோடு வருகிறதாகச்சொல்லி இருவரும் புறப்பட்டார்கள். பாதிவழி படகில் போனார்கள். பிற்பாடு குறுக்குவழியாய்ப் போகலாமென்று படகைவிட்டு கீழே இறங்கி கரையோரமாய் நடந்துகொண்டிருக்கும் போது ஏதோ ஒன்று ஒருபெரிய மலைபோல எதிரில்தோற்றினது, ஓஹோ இதுயானைபோல யிருக்கிறதென்று நினைத்து அதைச்சுட்டார்கள். தாங்கள் முன்னுக்கு வெகு ஜாக்கிறதையாய்ப் போனார்கள். இவர்கள் பார்த்தது யானையா யிருந்தாலல்லவோ அப்பால் நகரும், அதுநகரவேயில்லை. உடனே ஒருகலபை உண்டாயிற்று. அவர்களுக்கு எதிரில் தோன்றினது ஒருகுடிசைசதிரள். அவர்கள் அந்தகுடிசைகளைப்பார்த்து யானையென்று சுடவே அந்த குடிசையிலிருந்தவர்கள் ஏதோ திருடர்கள்வந்து விட்டார்கள் என்று எண்ணி இரவெல்லாம் சுட்டுக்கொண்டே இருந்தார்கள். துப்பாக்கி வெடிகளுக்குபயந்து இந்த இரண்டு மனிதர்களும் கீழேபுல்லில் மறைவாய் படுத்துக்கொண்டு துப்பாக்கி சுடுகிறது நிற்கிறவரையில் அங்கேயே இருந்துவிட்டு, பிற்பாடு மெல்லமெல்ல நகர்ந்துபோனார்கள். பொழுதுவிடிந்த உடன் ஷை குடிசைக்காரர்கள் தாங்கள் திருடர்களை அடித்துத் துரத்தினதாக பெருமை சொல்லிக் கொண்டார்கள்.

---

### மலையாளத்து ரெயில்வே.

தலைச்சேரிக்கும் கன்னனூருக்கும் பாதைமுடிந்து போக்குவரவு நடந்துவருகிறது. மே௴ 20௳ முதல் டிரெயின் விடப்பட்டது. கன்னனூர் ஸ்டேஷனில் வேடிக்கையாக வெகுஜனங்கள் கூடியிருந்தார்கள்.

---

### ஓர் தீவிபத்து.

கீழ் பர்மாநாட்டில் சிட்டாங்கு கிளை இருப்புப்பாதையிலுள்ள ஸ்டேஷன்களில் ஒன்றாகிய பெயுண்டாஸாவில் சிலதினங்களுக்குமுன்னே பெரிய தீவிபத்து நேர்ந்து அநேகவீடுகள் வெந்து தணிந்தன. அவ்வூரில் முக்கால்வாசி ஜனங்கள் இப்போது குடியிருக்க வீடில்லாமல் தவிக்கின்றார்கள். பொருள் நஷ்டமும் அதிகமென்றுசொல்லிக் கொள்ளுகிறார்கள்.

### நியாயஸ்தலத்தில் வாதியைப் பிரதிவாதி குத்தினான்.

பனதூர் என்ற இடத்தில் மே௴ 13௳ மாஜிஸ்ட்ரேட்டார் ஒருசிவில்கேசு தீர்ப்புசொல்லிவிட்டு தம் அரைக்குள் போய்க்கொண்டிருந்தார். வியாஜ்ஜியம் தோற்றுப்போன பிரதிவாதி வாதியை ஒருகத்தியால் பலயிடத்தில் குத்திவிட்டான். அவன் இனி பிழைப்பது நிச்சயமில்லை. அவனிடத்தில் ஒருமரண வாக்குமூலம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்படி குத்தினதினால் சுதேசிகள் கத்திவைத்துக் கொள்ளக் கூடாதென்று சொல்லப்படுகின்றது. வெள்ளைக்காரர்கள் கத்திவைத்துக்கொண்டிருந்தா லிம்மாதிரி ஆபத்து நேராது போலும்.

### பம்பாய் ரெயில்வே விபத்து.

நாளது மாதம் 24௳ முக்தபாய் என்ற ஒருஸ்திரீ ஜி. ஐ. பி. இருப்புப்பாதையில் தாடர் ஸ்டேஷனில் ஒரு வண்டித்தொடரின் எஞ்சின்கீழ் அகப்பட்டு மாண்டாள். அவள் தொடர் வண்டிவரும்போது இருப்புப்பாதையை தாண்டப்பார்த்தாள். பாதி தாண்டும்போது வண்டிவந்துவிட்டது. டிரைவர் என்ன கஷ்டப்பட்டு பிரேக் போட்டபோதிலும் வண்டியின்கீழ் அகப்பட்டுக் கொண்டதினால் பலயிடத்தில் காயம் உண்டாயிற்று. ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோன இரண்டுமணி நேரத்திற்கெல்லாம் அவள் இறந்துபோனாள்.

### ஒரு நியாயஸ்தலத்தில் நெருப்பு.

நாளது௴ 20௳ ஸீல்டான் மைகாஸ்கோர்டில் வெகு பெருந்தீபற்றியது. போலீசார் முயற்சிசெய்தில்லாவிட்டால் அந்தநெருப்பு வெகு பிரமாதமாய் இருக்கும். ஒருகடன் தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு, இருபதுவண்டி புல்கட்டுகள் ஜெப்தி செய்யப்பட்டு கோர்ட்டில்போட்டு வைக்கப்பட்டிருந்தன. சந்திவேளையில் அந்தப்புல்கட்டுகளுக்கு நடுவில் என்னமோபுகை வருவதாக காணப்பட்டது. அதைபரிசோதிக்க வருமுன்னால் இரண்டு நிமிஷத்தில் அந்தப் புல்கட்டுகள் எல்லாம் நெருப்பு பற்றிக்கொண்டது. போலீஸார் நெருப்பாட்களுடன் வந்ததினால் பக்கத்து கூறைவீடுகளில் நெருப்புபிடிக்காமல் இருந்தது. ஒருமணி நேரத்திற்

நெருப்பு முற்றிலும் அவிக்கப்பட்டது. இன்ன காரணத்தினால் நெருப்பு அங்கேபற்றிக்கொண்டதென்று இன்னும் தெரியவில்லை.

## ஒருதிருடனுடன் சண்டை.

பட்ஜ் பட்ஜ் என்ற இடத்தில் ஒருதிருடன் ஒரு வீட்டிற்குள்புகுந்து எல்லாவற்றையும் எடுத்து மூட்டைகட்டும் சமயத்தில் வீட்டுக்காரன் திருடனை நேரே பார்த்து பிடித்துக்கொண்டான். இருவருக்கும் மல்யுத்தம் நடந்தது. வீட்டுக்காரனோடு திருடன்சண்டைபோட்டு ஜெயிக்கிறதாக திருடனுக்குத் தோன்றவில்லை. திருடன் உடனே வீட்டுக்காரன் காதைக்கடித்தான். அந்தவலி பொறுக்கமாட்டாமல் வீட்டுக்காரன் திருடனை கைவிட்டுவிட்டான். திருடனும் ஓடிப்போய் பிறகு அகப்பட்டு விசாரிக்கப்பட்டான். விசாரணையில் இரண்டுவருஷங் கடுங்காவல் தண்டனையும் அதில் மூன்று மாதம் தனிக்காவல் தண்டனையும் அடைந்தான்.

### விஷமுண்டு மாண்டாள்.

சுமார் 16-வயதுள்ள பாலம்மா ளென்பவள் கணவன் தொந்திரவு சகிக்கமாட்டாதவளாய் விஷத்தை வாங்கித்தின்று வாந்திபேதி கண்டதால் அவள் தாயாரும் ஒருவயித்தியரும் வந்துபார்த்து விசாரிக்க அப்பெண் உண்மையை சொல்லிவிடவே இராயப்பேட்டை வயித்திய சாலைக்கு அனுப்பி விட்டார்கள். அனுப்பியும் அவள் அங்கேயே மரணமடைந்தாள்.

---

## வங்காளம்.

### ஒருபுலியுடன் கைச்சண்டை.

வங்காளத்தில் ஹிரதூர் என்ற கிராமத்தில் ஒருமகமதியன், கிராமத்திற்கு எட்டி மைதானத்தில் கால்கழுவ உட்கார்ந்தபோது ஒருபுலி அவனைப்பார்க்க ஓடிவந்தது. அப்போது அவன் பயந்து ஓடத் தலைப்பட்டான். இப்படி அவனோடே அதோட வெகுதூரம் ஓடினார்கள். நடுவழியில் வேறொருவன் அதன் கண்ணுக்குத்தென்பட்டான். இந்தப் புதுமனிதன் தேவளி என்றகிராமத்து வைத்தியன். அவன் ஹிரதூர்க்குப் போய்க் கொண்டிருந்தான். அப்போது மகமதியனைவிட்டு வைத்தியனைத்துரத்திற்று. அதுகண்டுவைத்தியன் வாயுவேகம் மனோவேகமாய் ஓடினான். புலி கிட்டக்கிட்ட வந்தது கண்டு தன்மேல்துணியை அதண்டைவீசி எறிந்தான், அதைப்புலி மோர்ந்துபார்த்துவிட்டு அதுமோசமென்று கண்டு மிக்ககோபம்கொண்டு அங்குகூடிக்கிடந்த கூட்டத்தார்களை உற்றுப்பார்த்தது.

இதற்குள் வைத்தியன் எங்கேயோ மறைந்துவிட்டான். அங்குக்கூடின குடிகளும் பலபேர் பல ஆயுதங்கள்கொண்டு வந்தார்கள். இதுகண்டு புலி தேவளியைப்பார்க்க ஓடிற்று, அப்போதுவழியில் ஆஷ்மன் என்ற மகம்மதியனைக் கண்டு அவனண்டைபோயிற்று. அதைக்கண்டதும் அவன் தன்காலால் அதை இரண்டு உதை உதைத்தான். உதைக்கவே கொஞ்சம்பயந்து மயங்கித் தயங்கிநின்றது. இதற்குள் அவன் ஒருமரமேலேறினான். மரமேறினபோது அவன்துணிகீழே தொங்கிற்று. அதைப்புலி பிடித்திழுத்தது. அப்போது மேலிருந்தவன் அந்தத்துணியை விட்டுவிடவே அதைப்புலி துண்டுதுண்டாய்க்கிழித்துவிட்டது. இப்படிச்செய்துவிட்டு, அந்தப்புலி அந்த ஆஷ்மன்மாட்டுக்கொட்டிலுக்குள் பாய்ந்தது. ஆஷ்மன்மெல்ல, எப்படியோ அதைவெளியில் துரத்திவிட்டான். வெளிவந்து பலதைப் பருண்டிற்று. அப்போது ஆஷ்மன் அதன்வாயில் "காச்" என்றதை ஆழமாய்க்குத்தி அதன்கண் ஒன்றைப் பொட்டையாக்கினான். அப்படிவாயை அடைத்துக் கண்ணை பொட்டையாக்கி யில்லாவிட்டால் அது இன்னும் பலகெடுதிகள் செய்திருக்கும். இப்படித் தன்வாயில் ஆஷ்மன் குத்தினது பொறுக்காமல் அவன்தோள்மேல் இரண்டுகைகளையும் வைத்து அவனைப் பிடித்துக்கொண்டு அவன்தலையைக் கடிக்கத் தொடங்கிற்று. ஆயினும் வாயில் காச்சால் குத்தியிருப்பதினால், கடிக்கமுடியவில்லை, அதற்குள் அவன்சகோதரனும் மற்றோரும் அதை அடித்துச் சாகப்பண்ணினார்கள் அது 5-முழநீள மிருந்தது.

## ஒரு ஜீவனாம்சக்கேசு.

மிஸஸ்கேஜோ தன் கணவனிடம் ஜீவனாம்சம் ஏற்பாடு செய்துவைக்கக் கேட்டதற்கு அவள் கணவன் ஆஜராய் தன்னையவள் புதுப்பேட்டையில் சென்ற அக்டோபர் மாதத்தில் கலியாணம் செய்துகொண்டு அடுத்த ஜனவரியிலேயே பிள்ளையைப்பெற்று விட்டதால், அப்பிள்ளை தனக்கு பிறந்தில்லாமையாலும், அவள் அவசாரியானமையாலும், அவ்விருவரையும் காப்பாற்றவேண்டியது கடமையல்ல வென்றாலும், விசாரணையிலேற்பட்டபடியால் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ராஜரத்தினமுதலியார் மாதம் 5-ரூபாய் ஜீவனாம்ச விகிதத்தைக் கொடுத்துவரும்படி உத்திரவு செய்துவிட்டார்.

## ஓர் அதிசயம்.

நாம் இதுவரையில் பாம்புதோல் உரிப்பதாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மனிதனாவது மிருகங்களாவது அப்படிச்செய்வதாய்க் கேட்டதில்லை. மனிதன்தோலுரிப்பதாய்ச்சொன்னால் யாராவது நம்புவார்களோ? சொல்பவர்களையன்றோ பயித்தியக்காரரென்பார்கள். அப்படியிருக்க அமெரிக்காகண்டத்தில் இந்தியானாபோலீஸ் என்னும் பட்டணத்தில் வருஷந்தோரும் ஒருமனிதன் தோல் உரிப்பதாகச் சொல்லப்படுகிறது. அம்மனிதனுக்கு தேகத்துத்தோல் கழன்றுபோவதுமன்றி கால் கைகளிலுள்ள நகங்களும் கழன்று போகின்றதாம், தோலும் நகங்களும் கழன்றுபோகும் காலத்தில் அம்மனிதன் தேகம் 104-டிகிரி சூடுடையதாயிருக்கிறதாம். பழந்தோல்கழன்று கொஞ்சகால மாகிறவரையில் புதுத்தோல் அதிகச்சூடு, அதிகக்குளிர்ச்சி, அதிக எரிச்சல் இவைகளைப்பொறுக்கமுடியாத ஸ்திதியிலிருக்கிறதாம். கொஞ்ச காலத்திற்கப்புரம் பழந்தோல்போலவே கெட்டியாய்ப் போய்விடுகிறதாம். வைத்தியர்கள் இன்னகாரணம்பற்றி அம்மனிதன் வருஷந்தோரும் தோலுரிக்கின்றான் என்று சொல்லத் தெறியாதவர்களா யிருக்கிறார்கள்.

---